
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




[வாரப்பதிப்பு]

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4— 0 |

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
☞ தனி ...கிதமும் உண்டு

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹு மார்கழி 25-உ (9—1—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 37.


## உண்மையான கதர்

### கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

### தமிழ் நாடு கதர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

### 1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் புளிச்ச ஏப்பம், வயிற்றுவலி, ஏப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

## கீழ்காய்நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0

வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,

சுதேச ஔஷதசாலை,

கு. மேல வீதி, கும்பகோணம்.



## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "மூதாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு காவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0

1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.


[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.

செனகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதறாஸ்.



இனும்! இனும்!!

டேபில் டயம்பீஸ் இனும்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேனேஜரின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் ஷை சில்வு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம் :—

தீ பான்ஸி வாட்சு அவுஸ்,

15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,

மதராஸ்.



## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின் போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா வினோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,

சென்னை.



## மதனகேசரி.

இணையற்ற மகா நாதபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களை பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்தவிருத்தி, போககிந்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.



## நாடுமதித்த நவகுண மிளகு.

1. பித்த மயக்கங்கள் காணாதோடும். 2. ஈரக்குலைவலி, மார்வலி, நீங்கிவிடும். 3. அமட்டல், வாந்தி, விக்கல் க்ஷணத்தில் நிற்கும். 4. உஷ்ணத்தால் ஏற்பட்ட போக்கு, அஜீரணம் தீர்ந்துவிடும். 5. வைசூரி, ஜுரம், ஜன்னி, பிரஸவ அறை, இக்காலங்களில் ஏற்படும் தாகம், வறட்சி உடனே நிற்கும். 6. ரயில், கப்பல், வண்டி முதலிய பயணத்தில் ஏற்படும் 1, 3 லக்கத்திலுள்ள ஆர்க்குணங்களுக்கு சஞ்சீவியாக பயன்படும். 7 கருட்டு, சிகரெட் முதலியன அதிகம் உபயோகப்படுத்துவதால் நேரும கெடுதல்களைபோக்கடிக்கும். 8. லாகிரிவஸ்துக்களால் ஏற்படும் மயக்கங்களை உடனே தணிக்கும். 9. பிரசங்கிகள், வக்கீல்கள், மாணவர்கள் இவர்களுக்கு ஏற்படும் நாவறட்சியை நீக்கவும், சாதாரண தாகத்தை தணிக்கவும், பின்னும் மூளைக்கு அதிக வேலை தந்து, ஆவியை போக்கி ஆன்ம சக்தி குறைக்கும் அதனால் உண்டாகும் தீமைகளுக்கு வைரியாகும்.

குறிப்பு:—இது சாதாரண முழு மிளகை அப்படியே சொரூபம் மாறாமல் பக்குவம் செய்தது. ஒருநாளில் எத்தனை தடவையேனும், தடவைக்கு எத்தனை மிளகேனும் வியாதி இருப்பினும், இல்லையேனும் பயமின்றி உபயோகிக்கலாம்.

அரை அவுன்ஸ் பாட்டல் 1க்கு 0—8—0

" " டஜன் 5—0—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் வி. பி-ல் 3 பாட்டல்களுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

ஹக்கீம் ம. அ. ஷம்ஷுத்தீன் சாஹிப்,

யூனானி தமிழ் சித்தவைத்தியம்,

மாயவரம், (தஞ்சாவூர் ஜில்லா S.I.R.)



## எது வேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனைவியல் சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்களும் விலைசயமாய் கிடைக்கும். விபரமாக இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி, மதராஸ்



## நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள் கதர் துணிகள் மருந்துகள் கடிகாரம் ஷாப் சாமான் முதலிய இதர எல்லா சாமான்களும் கிடைக்கும். முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி கம்பெனி.

தபால் பெட்டி 292.

6-99 பவழக்காரத்தெருவு,

சென்னை.

# பேயும் பிசாசுகளும்.

[கைவல்ய சுவாமியார் எழுதுவது.]

இறந்த மனிதனின் ஆத்மா பிசாசு ஆவது உண்மையா? அது பெண்களைப்பிடிப்பது மெய்யா? இல்லையேல் பெண்கள் பிசாசென்று தலைவிரித்தாடுவதும், சில அற்புதச் செயல்களை செய்வதையும் காண்கிறோமே அது என்ன? என்னும் கேள்விகளை உத்தமபாளையம் தமிழாசிரியர் ஸ்ரீமான் எ. தணிகாசலம் பிள்ளையவர்கள் கேட்டிருக்கிறார். இது எல்லோருக்கும் நன்மையான கேள்வியே. நாம் ஒவ்வொருவரும் இதன் உண்மையைத் தெரிந்துகொண்டால் தெரிந்தவரையிலும் அவரவர்கள் குடும்பங்களிலுண்டாகும் சில தொந்தரவுகள் நீங்குவதற்கு அநுகூலமாகவிருக்கும். நம் வித்வான்கள் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஆராய்ச்சி செய்து ஜனங்களுக்கு உண்மையைப் பரப்பினால் இவை பெரும் நன்மையை உண்டுபண்ணும். நம் வித்வான் பிள்ளை அவர்கள் இந்நோக்கமுடையவரென அறிந்து என் மனம் திருப்தியடைகிறது.

ஆத்ம நிச்சயம், ஈஸ்வர நிச்சயம், நித்தியானந்த வாழ்வு, உத்தம புருஷார்த்தம் முதலியவற்றைப்பற்றி பகிர்முகமாய்க் காணப்படும் பிரபஞ்சப் பொருளின் மூலமாய் தெரிந்துகொள்ள முடியாததுபோல மனிதன் இறந்தபின் என்னவாகிறான் என்பதை இந்த மனதால் தெரியமுடிவதில்லை. இதில் பிரவர்த்திற்கும் மனமானது இடைவிடாது மாறிக்கொண்டிருப்பதும், எப்பொழுதும்சஞ்சல சுபாவமுள்ளதுமாகையால் சிதருண்டு போகக் கூடியதாயிருக்கிறது. இதை அநேக காலத்திற்கு முன் தெரிந்த மனிதர்கள், தெளிந்த அறிவிலிருந்து அவரவர்கள் கூட்டத்தின் அறிவிற்குத் தகுந்தபடி உபதேசித்தார்கள். நம் அறிவிற்குத்தகுந்தபடி நாமும் விவகரித்து வருகிறோம். மதங்கள் மூவகைப்பகுதிகளடங்கியுள்ளதெனநாமறிவோம். முதலாவது தத்துவப்பகுதி இதில் பிசாசு என்னும் விஷயம் கிடையாது. இரண்டாவது அத்தத்துவப்பகுதியே, எல்லா ஆன்மாக்களும், அறிந்துய்யும்பொருட்டு உபாக்கியான வடிவமாயமைந்துள்ள பகுதியாம். மூன்றும் பகுதி கற்பிதக்கதைகளமைந்தபுராணப்பகுதியாகின்றது. அறிதற்கரிய தத்துவாம்சத்தை அனைவரும் உணர்ந்துய்யுமாறு கற்பனைக்கதைகளுடன் சேர்ந்து அத்தத்துவங்களை விளக்க இயற்றிய நூலே புராணமென்று சொல்லப்படுகிறது. இதில்தான் பிசாசென்றும், பூதமென்றும், கந்தர்வர்களென்றும்சொல்லப்பட்டிருக்கிறது. மாயைக்கும், பிரமைக்கும், ஆசைக்கும், மனதாலுண்டாகும் மாறுதலான தோற்றங்களுக்குமே இப்பெயர் கொடுத்தார்கள். மூன்றாவதான இக்கர்மப்பகுதியில் முக்கியமாய் அநுஷ்டானங்களும், சடங்குகளும், பிரதக்ஷண நமஸ்காரம் முதலிய பலவகை கர்மங்களும், புஷ்பம், தீபதூபம் என்னுமித்தகைய இந்திரியங்களுக்கு விஷயமாகக்கூடிய வேறுபல அம்சங்களும் பெரும்பாலும் அடங்கியிருக்கும். இதில்தான் அநேக பிசாசுகளும், பூசைகளும் எந்திரங்களும் பலிகளுமுண்டாகின்றன, புனர்ஜென்மத்தை ஒத்துக்கொண்ட நமக்குப் பிரமாணம் தத்துவப் பகுதி. அதில் ஜீவன் தேகத்தைவிட்டவுடன் மறுதேகம் எடுத்துக்கொள்ளுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சோதிட சாஸ்திரத்தில் "பிரச்னமார்க்க"மென்று ஒரு பகுதி அநேக நாளுக்குமுன் ஒரு நம்பூதிரி பிராமணனால் எழுதப்பட்டு சோதிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இது ஈஸ்வர தோஷம், பகவதி தோஷம், நாகர்தோஷம், சத்துரு தோஷம், பூதப்பிரேத பைசாச தோஷம் முதல் பத்து தோஷங்களை வாதா தோஷமென்று சொல்லப்பெற்று பரிகாரங்களும் செய்யப்பட்டு வருகின்றன. இக்கொள்கை மலையாள தேசத்தில் முதல் முதலுண்டாகி பரதேசங்களிலும் பரவியிருக்கிறது. இப்பொழுது அநேகமாக மலையாளத்து சோதிடர்களே சோதிடம் சொல்லுகிறார்கள். பூதப்பிரேத பைசாச தோஷங்களை இவர்கள் சொல்லாமல் விடுவதில்லை. வியாதியின் சந்தர்ப்பத்திலோ கஷ்டகாலம் வரும் சந்தர்ப்பத்திலோ சோதிடம் பார்ப்பது நம் வழக்கம். சோதிடனுக்கும் இது தெரியும். சோதிடன் வாதை தோஷமிருப்பதாகச் சொல்லுகிறான். வாதை என்றால், துன்பம், நோய், வருத்தம் என்று அர்த்தம். சோதிடன் வாதாதோஷம் சொன்னவுடன் துன்பம், வருத்தம் வந்ததற்கு சம்விவகாரத்திலுள்ள காரியா காரியங்களை கவனியாமலும் நோயையும், அது வந்ததின் காரணங்களையும் வைத்தியத்தையும் ஆலோசித்தாலும் நிச்சயப்படுத்தாமல் அதை விட்டு விட்டு பில்லி, சூனிய, பிசாசு தெய்வதோஷமென்று தீர்மானப்படுத்திவிடுகிறோம். பிசாசு என்னும் பிரமையைக்காத்துவர சோதிடம் வேலியாகவிருக்கிறது. சோதிடத்தில் கணிதம் தவிர பலபாகம் சரியல்லவென்பது அநேக மேதாவிகளின் கருத்தாயிருக்கையில் பிரச்னமார்க்கம் யுக்திக்கும் சாஸ்திரத்திற்கும் நேர்விரோதமானது என்பதில் சந்தேகமில்லை. ஜனங்களுக்கு விசாரணையில்லாததாலும், காரியத்தைத் தீர்த்துக்கொள்ளும் ஆசையே மேல்நோக்கி நிற்பதாலும், அந்த ஆசையின் வழியே சோதிடம் சொல்லுவதாலும், சாஸ்திரமென்றால் எதையும் நம்பும்படியாய் பழக்கப்பட்டிருப்பதாலும், அவனவன் காரியத்திற்கும் தொழிலுக்கும் லாபத்தை உத்தேசித்து நடக்கும் குருக்கள் மந்திரவாதிகளாலும், தன் துன்பத்திற்குக் காரணம் தெரிந்துகொள்ள புத்தியில்லாததாலும், தெரிந்து புத்தி சொன்னால் அதைப்பகுத்துப்பார்த்து மூடநம்பிக்கையைத் தொலைக்க விவேகமில்லாததாலும், இந்து மதத்தின் உண்மை தத்துவம் நமக்குப் போதிக்கப்படாமையாலும், புராணங்களும் கட்டுக்கதைகளும் அதையே பேசும் குருக்களையும் படித்தவர்களையுமே இந்துமதமென்று நினைப்பதாலும், மனிதனைவிட ரூபம், செய்கை, குணம், பார்வை முதலியவை அகோரமடைந்து கையில் கட்டாரி, வாள், கதை முதலிய ஆயுதம்பூண்டு எப்பொழுதும் பலியே பிரதானமாகவுடைய ரூபங்களையமைத்துத் தெய்வமாக வணங்கிவருவதாலும், அதற்குப் பலியிட்டு வணங்கி காரிய சித்தியடைந்தோமென்னும் திருப்தியாலும் முத்தொழிலில் அழித்தலென்பது ருத்திரனுடையதென்றும் அவனுக்குப்பெண்ஜாதி காளியென்றும்; காளியின் பரிவாரம் பேய், பிசாசென்றும் ருத்திரனுக்கு வீடு சுடுகாடென்றும்,பேயோட்டாடி சுடலையாடி என்னும் பேரோடுகூடினவனென்றும் மனிதனுடைய தலையே மாலையாகவுடையவனென்றும், புராணங்களிலும் கதைகளிலும் பண்டிதர்களும் சாதாரண அறிவுடையவர்களும் படித்துக்கேட்டு இருப்பதினாலும், கடவுள் துதியில் தத்துவம் தெரிந்தோ தெரியாமலோ பேய் பிசாசுகளை அதில் சேர்த்துப்பாடி. அந்தப்பாட்டையே கடவுள் ஸ்துதியாகப் பாடிக்கொண்டு வருவதாலும்,நம் ஆலயங்களின் முன்னணியில் பதினெட்டாம்படி முதலிய பல கருப்புகளையும், மதுரை வீரன், முனியப்பன், முதலிய தேவதைகளையும் ஏற்படுத்தி முதற்பூசை அவைகளுக்கென்றும், அவைகளுக்குப்பூசை ஆனபின்தான் சாமிக்குப் பூசை ஆகுமென்று கோவிலுக்கு வந்துபோனவர்களுக்கு பரவியிருப்பதாலும், சாமி வந்திருப்பதாக பூசாரி ஆடி, சத்தம்போட்டு முகத்தை விகாரப்படுத்தி காண்பித்து வாளால் ரத்தக்குறி உண்டுபண்ணி வாக்குச்சொல்லுவதாலும், கிராமக் கோவில்களில் வைத்திருக்கும் பயங்கர ரூபங்கள் மனதிலபதிந்து சொப்பனத்தில் அவை வந்துகலந்து கொள்ளுவதினால் உண்டாகும் பயத்தின்கெடுதலாலும்,தாய்தந்தையர்கள்செல்வத்தால் வளர்த்த பெண்ணின் மனமொப்பாக் கணவனாலும், மனமொப்பின மறு புருஷனின் பந்தனத்தாலும், சிறுவயதுப் பெண்களின் சாந்தி முகூர்த்தத்தினாலும், பிசாசு கதைகளையும், ஓட்டும் பூசாரி உடுக்கைகளையும், வீட்டில் பேசுவதைக் கேட்டு மூளையில் பதிந்திருப்பதினாலும், மந்திரவாதிகள் செய்யும் மந்திர தந்திர மனோவசியத்தாலும், இவளுக்கு அநேகமாகப் பிசாசு இருக்கிறது கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதாலும், பெண்களுக்கு மனமுதலெல்லா இந்திரியங்களும் லேசான தும்மலேசில் ஆச்சரியமடையக் கூடியதாகலாலும், அச்சமென்பது அவர்கள் கூடவே பிறந்ததாலும், தேகத்திலுள்ள ஈரக்குலை குண்டிக்காய் நுரையீரல் இரைப்பை முதலிய முக்கிய பாகங்களில் யாதொருவித வியாதிக் குறிப்பில்லாமல் மனதிலுண்டாகும் சில விகற்பங்கள் வியாதி ரூபமாகக் காண்பிக்கும். இதைப் பிசாசென்று நாம் அநேக வித மந்திர தந்திர பூசை முதலிய சிகிச்சை செய்கிறோம். இவை பெண்களுக்கே வருவதாலும், இதைப் படித்து தெரிந்தவர்கள் பொறுமையோடு நேரத்தைச் செலவு செய்து ஜனங்களுக்குத் தெரியப்படுத்தாதினாலும், தெரிந்துகொள்ள புத்திக்கு சக்தி இல்லாததினாலும் இன்னும் இவை போன்ற காரணங்களினால் பிசாசு நம் தேச மெல்லாம் பரவியிருக்கிறது.

மகமதிய மதத்தைப்பற்றிக் கவனிப்போம். ஆண்டவன் எல்லாப் படைப்பிற்கு முன் இப்பீலிசைப் படைத்தார். பின் மனிதனைப் படைத்தார் இப்பிலீசினிடம் மனிதனை வணங்கச் சொன்னார், "நான் ஒளியிலிருந்து உண்டானவன். மனிதன் மண்ணிலிருந்து உண்டானவன். அவனை வணங்கமாட்டேன்." என்று இப்பிலீஸ் மறுத்து விட்டது. இந்த மனிதனை எப்படியாவது கெடுப்பேன் என்று இப்பிலீஸ் சொல்லல். "என்னைச் சரியாய் வணங்குகி வனை நீ ஒன்றும் செய்ய முடியாது என்று மனிதனை ஆசீர்வதித்து இப்பிலீசைத் தள்ளிவிட்டார். அந்த இப்பிலீஸ் தன் ஏவற்காரர்களான ஜின் முதல் பத்து பேரைச் சேர்த்துக்கொண்டு மனிதனுக்கு விரோதம் செய்துகொண்டு வருகிறது. இதன் தத்துவமென்ன? இதைக் கவனிக்கையில் நம்மதத்திற்கும் இஸ்லாத்திற்கும் வித்தியாசமே இல்லை. எப்படி என்றால் மாயையின் தோற்றம் உலகமென்கிறோம். அப்பொழுது ஆசையே முதல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆசைக்கு ஏவல்காரர்கள் ராகத்துவேஷாதி பத்துப்பேர். இந்த ஆசை மனிதனை வணங்குவதில்லை. ஆகையால் வணங்கப்பட்ட மனிதன் கடவுளிடமே யிருப்பான். ஆசையை அடிமைப்படுத்தக் கடவுளை கிரமமாக வணங்க வேண்டும். இந்த ஆசையைத்தான் இப்பிலீஸ் என்பது. இதைத்தான் அவர்களும் பிசாசு என்கிறார்கள். நாமும் ஆசையைத்தான் பிசாசு என்கிறோம். மகமதியப் பெண்களுக்கும் பிசாசு பிடிக்கும். மந்திர தந்திர எந்திரங்களு முண்டு. சேட்டை அவரவர் சுபாவத்திற்குத் தகுந்தபடியிருக்கும். இந்தியாவிலிருக்கும் மகமதியப் பெண்களுக்கேஅதிகமாகபிசாசுசேட்டை உண்டாகிறது. அவர்களும் நம் தேசம்; நம்கூடப் பழகினவர்கள். கிருஸ்துவ மதத்தைப்பற்றி கவனிப்போம். ஆதி மனிதர்களான ஆதாம் ஏவாள் என்பவர்களைப் பிசாசு கெட்டப் பழத்தைத் தின்னும்படி தூண்டித் தின்னச் செய்து ஆண்டவன் கட்டளையை மறக்கும்படியாகச் செய்தது. இவ்விடத்தில் பிசாசு என்பதற்கு மாயை. கிருஸ்து வேதத்தின் கருத்தும் ஆசை என்பதுதான். ஆதாம் ஏவாளுக்கு முன் மனிதனே இல்லாமலிருக்கையில் பிசாசு எங்கிருந்துவரும்? நம் தேசத்தைப்போல் கிருஸ்துவ தேசங்களில் பிசாசு கிடையாது. இருந்தாலும் ஒன்றோ அரையோ புஸ்தகங்களிலிருக்குமே

ஒழிய பெண்களிடம் வருவதில்லை. பெண்களுக்கு மரியாதை அதிகமான தேசமானதால் பிசாசுகளுக்கும் மரியாதை தெரியும்போலும்! நம் தேசத்தில் படித்து நாகரீகமடைந்த குடும்பங்களில் பிசாசு பிடிப்பதில்லை. சென்னை பீச்ரோட் பெண்கள் காலேஜில் 300 பெண்கள் அழகாகவும் நாகரீகமாகவும் உடை உடுத்தி உல்லாசமாகத் திரிகிறார்கள். அவர்களில் யாரும் பிசாசு பிடித்தாடுவதில்லை. மனதிலுண்டாகும் சில விகற்பங்கள் தேகத்தில் சேட்டையாகக் கண்டவுடன் மேற்சொன்ன பெண்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இஸ்டீரியா என்று போதிக்கப்பட்டிருக்கிறது. பிசாசு என்கிற எண்ணமில்லை. நம் பெண்கள் நாயார்கூடப் படுத்து எழுந்திருக்கையில் முறுக்கிச் சோம்பல்விட்டு எழுந்திருந்தால் இவை பேயாக இருக்குமென்னும் சங்கை வந்துவிடும். அதிலும் குழந்தை இல்லாமலிருந்தால் கட்டாயம் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோயே தீரவேண்டும். புருஷன் வீட்டிலிருந்து தாய் வீடு வந்த பெண்ணைப்பார்க்க அக்கம் பக்கத்துப் பெண்கள் வருவார்கள். ஒருத்தி, "அம்மணி முன் எவ்வளவு சுறு சுறுப்பாயிருக்கும்! இப்பொழுது அப்படியா இருக்கிறது." இன்னொருத்தி "முன்னிருந்த முகத்தின் களை இப்பொழுதில்லை" இதைக் கேட்ட அந்த வீட்டுப் பெண்கள் அதற்காகத்தான் அதை கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதைக் கேட்ட இன்னொருத்தி எங்க அக்கா மகளுக்குக்கூட இப்படித்தானிருந்தது. எங்களூர் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போய் பூசாரி துண்ணூர் போட்டபின் தான் நல்லாயிற்று. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட மற்றொருத்தி "எம்ம அம்மணியை ஆட்டக்கூடச் செய்தார்களாம்." பின்னொருத்தி அப்படி எல்லாம் பார்த்ததினால் தான் அந்த அம்மணி குளித்து இருக்கிறாள். மரியாதையையும் அன்பையும் உலக ஒழுக்கத்தையும் காண்பிக்க வந்தவர்கள் செய்தது என்ன? முன்னமே இருள் அடைந்திருக்கும் அந்தப் பெண்ணின் மூளையிலும் மனதிலும் ஒரு பிசாசை பிரதிஷ்டை பண்ணினார்கள். இதிலிருந்து இந்தப் பெண்ணின் கதை ஆரம்பிக்கப்பட்டு இன்னுமநேகப் பெண்களுக்கும் பரவுகிறது. நம் பண்டிதர் கேட்டிருக்கும் கேள்விக்கு உலக அநுபோகங்களையும் மஹோசயங்களின் கருத்துகளையும் எழுத வேண்டியிருப்பதாலும் "குடி அரசு" இடம் கொடுக்கப் பயப்படுவதாலும் அடுத்த வியாசத்தில் பதிலின் முடிவை எழுதுகிறேன், மாயை என்வந்தமெனில் புத்தி விசாரமற்றதினால்தான்; அப்படியே பிசாசும்

(இன்னும் வரும்)

---

## பூளைமேடு
## சர்வஜன வித்தியாசாலை.
## சைன்ஸ் கட்டடத்திற்காக
## அஸ்திவாரக்கல் நிறுவும் விழா.

1927-௵ ஜனவரி௴ 17௳க்குச் சரியான அக்ஷய-௵ தை௴ 4௳ திங்கட்கிழமை பிற்பகல் 5-மணிக்கு கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் காக்ஸ் ஐ. ஸி. எஸ் துரையவர்களால் சர்வஜன வித்தியாசாலை சைன்ஸ் கட்டடத்திற்காக அஸ்திவாரக்கல் நாட்டப்பெறும். அச்சமயம் பல பெரியோர்களும் விஜயம் செய்வார்கள்.

ஷை வைபவத்திற்கு வேண்டிய சகல வேலைகளையும் மிகவும் துரிதமாக ஷை ஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் P. S. G. ரங்கசாமி நாயுடு அவர்கள் செய்து வருகின்றார்கள் என கே. இராமசாமி அறிவிக்கிறார்.

## 14-வது செங்குந்தர் மஹாநாடு
## சென்னிமலையில் கூட்டம்.

கோயமுத்தூர் ஜில்லா 14-வது செங்குந்தர் மகாநாடு சென்னிமலையில் டிசம்பர்௴ 29, 30 தேதிகளில் நடைபெற்றது. பாப்பாரபட்டி யூனியன் சேர்மென் ஸ்ரீமான் எம். சின்னமுத்து முதலியார் தலைமை வகித்தார். மகாநாட்டுத் தலைவரை சிறப்பாக வரவேற்று ஊர்வலம் செய்யப்பட்டது. ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் பி. வரதராஜலு நாயுடு, வேலாயுதம்பிள்ளை, தர்மபுரி டாக்டர் தர்மலிங்கம் பிள்ளை பாப்பாரபட்டி. அப்பு முதலியார், மிட்டாதார் கோவிந்தராஜ முதலியார், சேலம் சிவகுருநாத பண்டாரம், பி பி பவானிசிங்கு, வை. நடேச பண்டாரம் முதலியோர்களும் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள். அக்கிராசனருக்கும் நாயக்கரவர்களுக்கும் நாயுடுகாரவர்களுக்கும் மகாநாட்டின்போரால் வரவேற்புத்தாள்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. தலைவர் தமது முன்னுரையில் தங்குலப் புலவர் திலகராகிய கூத்தருடைய காலவரையறையையும், பெருமையையும் தங்கள் குலச்சங்க பட்டயத்தின் வரலாற்றையும் ஆதாரத்தோடு எடுத்துக்காட்டி. அத்தகைய பெரும்புகழ் வாய்ந்த பரம்பரையில் வந்த செங்குந்த மரபினர் தற்காலம் கல்வியற்று கைத்தொழில் முறைகளையும் மறந்து மதுபானப் பிரியர்களாய் வறுமையில் வருந்தல் விசனிக்கத் தக்கதென்றும், எச்சமூகமும் முன்னேறுவதற்கு இன்றியமையாது வேண்டற்பாலது கல்விதானென்றும், தமது சமூகத்தின் கைத்தொழில்முறைகளின் மேம்பாடு மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும் பார்க்கக் காணலாமென்றும், தங்களுடைய சமய நிலை முருகக் கடவுளை வழிபடும் சைவமேயாகுமென்றும். பார்ப்பனரைக்கொண்டு நடத்திவரும் வைதிகக் கிரியைகள் மதமாகாதென்றும், திதி நட்சத்திரங்களின் பெயர்களை வடமொழியிற் கூறி மிரட்டி அடிமைக்குழியில் அழுத்திவரும் பார்ப்பனரை இனிமேலும் நன்மை தீமைச் சடங்குகளுக்கு அழையாமல் காஞ்சி முதலிய இடங்களிலிருக்கும் தம்மரபில் உதித்த "தேசிகர்"களைக்கொண்டு நடத்துவதோடு சிவதீட்சை முதலியவற்றை அவ்வறிஞர்களிடமே பெறவேண்டுமென்றும் விளக்கமாக எடுத்துக் காட்டினார். ஸ்ரீமான்கள் நாயக்கரும், நாயுடுவும் தற்கால சமூக ராஜீய விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் பேசியதின் விபரம் வேறிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

## பொருள்வைத்தசேரி
## செங்குந்த முதலியார் மகாஜன சபை.

2—1—27௳ மாலை 5-30-மணிக்கு தக்கோலம் உயர் திருவாளர் எ. ஆர். செல்லப்ப முதலியார் அவர்கள் தலைமை வகித்து பேசியதின் சாராம்சமாவது:—முற்காலத்தில் நம்மவர்கள் அரசுரிமை பெற்று அரசாட்சி நடத்திவரும் காலத்தில நம வகுப்பாளர் வீரத்துடனும கல்வி அறிவு பக்தி முதலியவைகளில் பின்னிடை[illegible] முற்போக்குடையவர்களாயும் பல [illegible] சிறந்த [illegible]உடையவர்களாயும் இருந்தார்களென்பதற்கு பல சான்றுகளுண்டு. தற்காலத்திலோ நம் குலத்தவர்கள் கல்வி அறிவு இல்லாமல் இருந்து வருவது நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோம். நமது சமூகம் முன்னேற வேண்டுமானால் ஆங்காங்கு சங்கங்கள் ஏற்படுத்தி "திராவிடன்" "குடியரசு" "தமிழ்நாடு" முதலிய பத்திரிகைகளை வரவழைத்து வாசிப்பதோடுகூட நமது குலத்தில் ஏற்படும் மணவினை பிணவினை முதலிய காரியங்களுக்கு நமது குலப் பெரியோர்களையே வைத்து ஷை காரியங்களை நடத்த வேண்டுமெனவும், சமீபத்தில் மதுரை பார்ப்பனரல்லாதார் மாகாண மகா நாட்டில் நடந்த தீர்மானப்படி நாம் நடக்க வேண்டியது அவசியமெனவும் காஞ்சீபுரம், தக்கோலம், சேலம். மதுரை, திருச்சி, சென்னை முதலிய இடங்களில் நம் குலத்தவர்கள் பார்ப்பனரைக் கொண்டு எவ்விதமான கிரியைகளையும் செய்துகொள்ளக் கூடாதென வற்புறுத்தியிருப்பதாலும் நாம் அதை கைக்கொள்ள வேண்டியது அவசியமெனவும், தேவஸ்தான மசோதா பிராமணரல்லாதார் அவசியம் அங்கீகரிக்க கடமைப் பட்டிருக்கிறோமென்றும், நம் தலைவர் ஸ்ரீமான் பனகால் ராஜா அவர்கள் இம்மசோதாவை பல இடையூறுகளுக்கும் பல சூழ்ச்சிகளுக்கும் மத்தியில் நிறைவேற்றினமைக்கு நாம் இச்சபையின் மூலமாக அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமென்றும், அம்மசோதா நல்ல பலன் தருமென்பதற்கு ஆக்ஷேபணையில்லையென்றும் மஞ்ச கொல்லை வாசிகளாகிய நம்மரபினர் இதை ஆக்ஷேபித்தது பார்ப்பனர் சூழ்ச்சியெனச் சொல்ல வேண்டுமே தவிர உண்மையாக நம்மரபினர் சொல்லியிருப்பார்களென்று நான் நினைக்கவில்லையென்றும், நம சமூகத்திற்காக ஒரு பத்திரிகை நடத்த வேண்டியதவசியமென்றும், அதற்காக நாங்கள் பெரு முயற்சி செய்திருக்கிறோமென்றும், அதற்காகத் தாங்களெல்லோரும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் தற்கால நிலைமை என்பதைப் பற்றியும் நீண்ட நேரம் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியபின் செ. நமசிவாய முதலியார் அவர்களால் நீண்ட கரகோஷத்தினிடையே புஷ்பமாலை சூட்டப்பெற்று ஆசனத்தமர்ந்தார். பின்பு சந்தனம் தாம்பூலம் புஷ்பம் கற்கண்டு முதலியவைவழங்கப்பட்டு 9—30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்ததென்று சபை காரியதரிசி சொ. ச. கந்தசாமி முதலியார் எழுதுகிறார்.

## மதுரை.

26-12-26-௳ ஞாயிற்றுக்கிழமை இரவு 9-மணிக்குமேல் ஸ்ரீமான் நாயக்கரவர்கள் தலைமையின்கீழ் பெரிய தகரக் கொட்டகையில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் மதுரையில் நிறுவவொரு கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 1000 பேர் குழுமியிருந்தனர். வாலிப சங்கத்தின் முக்கியத்தைப்பற்றி ஸ்ரீமான்கள் எ. இராமசாமி முதலியாரும் சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரும் விரிவுரை நிகழ்த்தினர். ஷை சங்கத்திற்குத் தலைவரையும் நிர்வாக சபை உறுப்பினரையும் தெரிந்தெடுத்தபின்னர் கூட்டம் முடிவுற்றது

# பிறப்புரிமையும் அதன் தடைகளும்.

29-12-26ல் சென்னிமலையில் பாப்பாரபட்டி யூனியன் சேர்மேன் ஸ்ரீமான் சின்னமுத்து முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிய கோயமுத்தூர் ஜில்லா 14-வது செங்குந்தர் மகாநாட்டில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் "பிறப்புரிமையும் அதன் தடைகளும்" என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம்.

பிறப்புரிமை என்பது யாருடைய பிறப்புரிமை என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நான் எடுத்துக் கொண்டது மனிதனுடைய பிறப்புரிமை என்பது தான். தடைகள் என்பன மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத் தான்.

## மனிதப்பிறவி.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று பெரியோர்கள் சொன்னதாகச் சொல்லுவார்கள். நான் அதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். "கொடுமை கொடுமை மனிதராகப்பிறப்பது மிகக் கொடுமை" என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். உலகில் உள்ள ஜீவகோடிகளில் எல்லாவற்றிலும் மனிதப் பிறப்பே மிகத் தாழ்ந்த பிறப்பு என்பதும் மனிதராகப் பிறப்பது மிகவும் கொடியது என்பதும் மனிதனைப் போல் அடிமை, உலகில்வேறு ஜீவன்கள் இல்லை என்பதும் என் அபிப்பிராயம். மனிதனைத் தவிர மற்ற ஜீவகோடிகள் எவ்வளவோ சந்தோஷத்துடனும் அடிமை உணர்வில்லாமலும் சுதந்திரமாய் வாழ்வதை நாம் பார்க்கிறோம். அவைகளில் சிலவற்றிற்கு கஷ்டமும் அந்நியரால் கஷ்டப்படுத்தத் தக்க நிலைமையும் ஏற்பட்டு இருந்தாலும் மனிதனைப் போல் உணர்ந்து துக்கிக்கிற சக்தியாகிய கொடுமை அவற்றிற்கு இல்லை.

## பகுத்தறிவு.

ஏனெனில், பகுத்தறிவு என்கிற ஒருஉபத்திரவம் கொடுக்கத் தக்க குணம், அவைகளுக்கில்லாததால்தான். உதாரணமாக குதிரைகளை ஜட்கா வண்டியில் பூட்டி ஒரு முரட்டு தோல் கயிற்றை மடித்துக்கொண்டு ஓட ஓட அதனின் மிகு மெல்லியதும் அதிக உபத்திரவம் கொடுக்கத் தக்க இடமுமாகிய மர்ம ஸ்தானத்தில் அடித்தாலும், நல்ல வாலிபமுள்ள காளை மாடுகளைக் கட்டித் தள்ளி அதன் விதர்களை மரக்கட்டையின் மேல் வைத்து மரக்கொட்டாப் பிடியினால் தண்ணீர் போல் கரையும்படி தட்டினாலும் அவைகளுக்கு கஷ்ட மாத்திரம் தோன்றுமே அல்லாமல் அதற்கு தன் பிறப்புரிமை இழந்து இப்படி கஷ்டமனுபவிக்கிறோமே என்கிற உணர்ச்சி இருக்காது. தவிரவும் அதற்கு மானம் அவமானம் என்கிற உணர்ச்சியும் இல்லை. இதோடு நாளைக்கு வேண்டுமே என்கிற கவலையும் இல்லை. எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை என்னும் அடிமைத் தன்மையும் இல்லை. ஆகவே மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட மானம் அவமானம் என்கிற உணர்ச்சியும், நாளைக்கு என்ன செய்வது என்கிற தன்னம்பிக்கை யற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியடைய முடியாத ஆசை என்னும் அடிமைத் தன்மையும், உடைத்தாயிருப்பதால் மனித ஜன்மமானது பிறவியிலேயேமிகுதியும்இழிவானதும் கொடுமையானதும்அடிமைத்தன்மைகொண்டதானதுமாய் இருக்கிறது என்பது நான் கொண்ட கருத்து.

## புறப்புரிமை

இப்படிப்பட்ட மனித ஜீவனுக்கு எல்லாவற்றையும்விட முக்கியமான உணர்ச்சியாகமான அவமானம் என்னும் தன்மானமாகிய சுயமரியாதையைத் தான் பிறப்புரிமையாகக் கொள்ள வேண்டி யிருக்கிறது. ஏனெனில் மனிதன் மானிடன் என்கிற பதங்களே மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட மொழிகள். ஆதலின் மனிதன் என்பவன் மானமுடையோன். எனவே மனிதனுக்கு மனிதத் தன்மையைக் காட்டும் உரிமையுடையது மானம் தான். அத் தன்மானமாகிய சுய மரியாதையைத் தான் மனிதன் பிறப்புரிமையாகக் கொண்டிருக்கிறான். இது ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் உரிமையுடையது. திலகர் பெருமான் "சுயராஜ்ஜியம் பிறப்புரிமை" என்று சொன்னாரென்றால் அவரும் வருணாசிரம தர்மப் பார்ப்பனராதலால் பார்ப்பனர்களுக்குப் பிறரை தாழ்வாய்க் கருதுவதே பிறப்புரிமை என்று நினைக்கிற முறையில் பொருளில்லாததும் அனுபவத்தில் பெரிதும் ஏமாற்றமே பொருளாகக் கொண்ட அரசியல் சம்பந்தமான சுயராஜ்ஜியம் என்னும் வார்த்தையை அவர் பிறப்புரிமைக்கு உபயோகிக்க வேண்டியவரானார். நாம் யாரையும் ஏமாற்றிப் பிழைக்க வேண்டியவர்கள் அல்லோம். உண்மையான மானிடத் தன்மையை அறிய வேண்டியவர்களா யிருக்கிறோம்; ஆதலால் மனிதனுக்கு பிறப்புரிமை தன்மானம் தான்.

## தடைகள்.

அதற்கு நம்முன் நிற்கும் தடைகள் என்ன என்பது இரண்டாவது விஷயம். தடைகள் இரண்டு விதம். ஒன்று இயற்கையாய் ஏற்பட்ட தடை. மற்றொன்று மற்றவர்களால் ஏற்பட்ட செயற்கைத் தடை.

## இயற்கைத்தடை.

நாளைக்கு வேண்டுமென்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத் தன்மையும் மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள். இத்தடைகள் நீங்குவதென்பது முற்றும் துறந்த துறவிகளுக்கே முடியக் கூடியது.

## செயற்கைத்தடை.

ஆதலால்,நான் செயற்கைத் தடைகளைப்பற்றியேபேசப் போகிறேன். இந்தச் செயற்கைத்தடை யென்பது ஒவ்வொரு தேசத்திற்கு ஒவ்வொருமாதிரியாகக்காணப்படுகிறது; நமது நாட்டில் நமது பிறப்புரிமையாகிய சுய மரியாதைக்கு முக்கியமாய் இரண்டு விதமான செயற்கைத் தடைகளைச் சொல்லலாம். ஒன்று அரசியல் சம்பந்தமாக பார்ப்பனர் என்னும்வகுப்பார் நம்மை ஏமாற்றி நமது சுயமரியாதையைக் கெடுத்திருப்பது. மற்றொன்று அதே வகுப்பார் பாரமார்த்திகத்திற்கு என்று மதம் என்கிற பெயரால் நம்மை ஏமாற்றி நிரந்தர அடிமையாக்கி நமது சுயமரியாதையை அடியோடு களைந்து வருவது. ஆகிய இந்த இரண்டு விஷயத்திலும் நமது மக்கள் ஏறக்குறைய எல்லோருமே—சிலர் ஏதாவதொன்றில்—சிலர் இரண்டிலும் மயங்கி அவ்வகுப்பாருக்கு அடிமையாகி மொத்தத்தில் சுய மரியாதை யற்று இருக்கிறோம். அன்றியும் அவ்வகுப்பாரைப் பின்பற்றி நம்மவருட் சிலரும் வயிறு வளர்ப்பதன் மூலமும் நமது சுயமரியாதைக்குத் தடைகளாக இருக்கிறார்கள். ஆயினும் இந்தச் சமயத்தில் அரசியல் என்பதின் மூலமாயுள்ள தடையை விட்டு பரமார்த்தம் என்னும் பேரால் உண்டாக்கிய தடைகளைப் பற்றியே இங்கு பேச எண்ணி இருக்கிறேன்.

## "இந்துமதம்."

நமது ஆத்மார்த்தத்திற்கென்றும் பாரமார்த்திகத்திற்கென்றும் இந்துமதம் என்பதாக ஒரு கற்பனையை இப்பார்ப்பனர்கள் நமது தலையில் சுமத்தி இருக்கிறார்கள். இந்துமதம் என்கிற இவ்வார்த்தைக்குப் பொருளே காண முடியவில்லை. இந்து என்ற வார்த்தையே தமிழ் வார்த்தை அல்ல என்பதை நீங்கள் முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இது பார்ப்பன பாஷை (ஒலி). பார்ப்பன பாஷையிலாவது இந்து என்பதற்குப் பொருளுண்டா என்று பார்த்தால் மதத்திற்கு பொருத்தமானதாக ஒரு பொருளும் இல்லை. வேறு ஏதாவது பாஷையில் இருக்கிறதா என்று பார்த்தால் பார்சி பாஷையிலோ அரபி பாஷையிலோ இந்து என்பதற்கு திருடன் என்கிற பொருள் தான் இருக்கிறது. சிலர் சிந்து நதிக்கரையில் இருந்ததால் சிந்து என்பது இந்து என்பதாக மருவி அது ஒரு கூட்டத்தினருக்கு பெயராகிப் பிறகு மதமாகி விட்டதாகவும் சொல்லுகிறார்கள். அது எப்படியோ இருக்கட்டும். இந்து மதம் என்றால் என்னவென்பதை யாவது கவனிப்போம். கிறிஸ்து மதம் என்றால் கிறிஸ்து மஹான் கட்டளையை அடிப்படையாகக் கொண்டது. மகமதிய மதம் என்றால் மகமது நபியின் கட்டளைகளை அடிப்படையாகக்கொண்டது. பௌத்த மதம் என்றால் புத்த பகவானின் கட்டளையை அடிப்படையாகக் கொண்டது. இதுபோல் மதம் என்று சொல்லக் கூடியவை ஒவ்வொன்றுக்கும் மத கர்த்தா இன்னார் அவரது கொள்கை கட்டளை இன்னது; இன்ன காலத்தில் ஏற்பட்டது; என்கிற உண்மைகள் உண்டு. அப்படி இந்து மதத்திற்கு யார் கர்த்தா? என்ன கொள்கை? எந்தக் காலம்? என்று சொல்வதற்கு என்ன ஆதாரமிருக்கிறது?

## வேதம்.

"அநாதி காலம் தொட்டு இருப்பதுவேதம்"

"அது கடவுள் சொன்னது" என்று சொல்லி ஏய்த்துவிடுவதாயிருந்தால் அது பொருத்தமாயிருக்க வேண்டாமா? அநாதியும் கடவுள் சொன்னதாயுமிருந்தால் கடவுளால் உண்டாக்கப்பட்ட எல்லா தேசத்திற்கும் கண்டத்திற்கும் இதுவே வேதமும் மதமுமாய் அல்லவா இருக்க வேண்டும்? பல்வேறு மதங்கள் இருப்பானேன்? கடவுளால் சொல்லப்பட்ட வேதம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாயல்லவா இருக்க வேண்டும்? உலகத்தில் உள்ள கடவுளின் மக்களிலும் முக்காலே அரைக்கால்வாசிப் பேர்களுக்கு இவ்வேத சம்பந்தமே இல்லாமல் வேறு வேறு வேதம் இருப்பானேன்? இந்துமதஸ்தர்கள் என்று சொல்லிக்கொள்பவருக்குள்ளாகவே சிலர் இவ்வேதத்தைப் படித்தால் கண்ணைக் குத்தவேண்டியதும் சிலர் காதினால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டியதும், எதற்காக? கிறிஸ்தவருக்கும் மகமதியருக்கும் முறையே ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மத சம்பந்தமான விசேஷ நாட்களாயிருக்கும்போது இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கு திங்கட்கிழமை, ஒருவருக்கு சனிக்கிழமை, ஒருவருக்கு வெள்ளிக்கிழமை இப்படியாக ஒரு வாரத்திலுள்ள 7 நாட்களுக்கும் வெவ்வேறு மனிதர்களாகவும் இன்னும் சிலருக்கு நாட்கள் போதாமலும் போவானேன?

## மதக் குறி.

மத சின்னங்கள் விஷயத்தில் ஒருவர் நாமம், ஒருவர் விபூதி ஒருவர் கருப்புபொட்டு ஒருவர் சந்தனக்கீரல், ஒருவர் முத்திரை, ஒருவர் நெடுக்கு, ஒருவர் குறுக்கு இப்படியாக பல மாறுதல்கள் ஏற்படுவானேன்? இந்த மாறுதல்களோடு இதற்குக் காரணங்கள் ஆளுக்கு ஒருவிதமாய்ச் சொல்லுவானேன்? இந்த வித்தியாசங்களை சுவாமிகளுக்கும் புகுத்துவானேன்? நாமம் என்பது என்ன என்று கேட்டால் சிலர் சுவாமியின் பாதம் என்கிறார்கள். வெள்ளை நாமம் இரண்டும் பாதமானால் நடுவில் உள்ள சிவப்பு நாமத்திற்கு பெயர் என்ன? அப்படியே சுவாமியின் பாதம் என்பதாகவே ஒப்புக்கொள்ளுவோமேயானால் சுவாமின் பாதத்தையே சுவாமியின் நெற்றியில் கொண்டுபோய் வைப்பானேன்?. இந்த நாமத்திற்கும், பாதம் வைத்த நாமம், பாதமில்லாத நாமம என்பதாக வடகலை தென்கலை என்று ஒருவருக்கொருவர் உதை போட்டுக்கொள்ளுவானேன்? இவைகளில் ஒரு நாமம் 3 நாமம பதினொரு நாமம் என்கிற கணக்குச்சண்டை எதற்கு? இந்துக்களிலேயே ஒரு சாரார் இந்த நாமததைப்பற்றி கேவலமாகப் பேசுவானேன்? இதுபோலவே விபூதி, பொட்டு, முத்திரை இதுகளுக்குப் பல பல மாதிரி வியாக்கியானங்கள் இருப்பானேன்? இவை மற்ற தேசத்தாரும் ஒப்புக்கொள்ளாததேன்?

## சுவாமி.

லிங்கத்தையும் ஆவுடையாரைப் பற்றியும் பலவிதமாகப் பேசுவானேன்? நமது சுவாமிகளுடைய பெயரெல்லாம் குறிகளெல்லாம் நமது தமிழ்ப் பாஷையில் இல்லாமல் அன்னிய பாஷையாகிய ஆரிய பாஷையில் இருப்பானேன்? சுவாமியை பூஜிப்பதற்கு நமக்கும் சுவாமிக்கும் மத்தியில் ஒரு அன்னியன் இருப்பானேன்? அன்னியபாஷையில் மந்திரங்களும் தோத்திரங்களும் இருப்பானேன்? ஆளுக்கு ஒரு விதமாக பூசை செய்வானேன்? இதற்காக நாம் பணம் கொடுப்பானேன்? ஒவ்வொரு சுவாமிக்கும் ஒவ்வொருவித வாகனங்கள் ஏற்படுத்துவானேன்? சுவாமிக்கு பெண்டு பிள்ளைகள், வைப்பாட்டிகள், தாசிகள், விபசாரத் தன்மைகள் ஆகியவைகளை கற்பிப்பானேன்? சிலர் சுவாமியைப் பார்த்தால் சுவாமி சக்தி ஓடிப்போவானேன்? சிலர் கோவிலுக்குள் வந்தால் கோவிலும் சுவாமியும் தீட்டாய்ப் போவானேன்? சிலர் சுவாமியைத் தொட்டால் சுவாமி இறந்துபோவானேன்? ஒரே பெயரும் ரூபமும் உள்ள சுவாமிகளுக்கு ஊருக்கு ஒருவிதமாய் சக்திகள் ஏற்பட்டிருப்பானேன்? காசி, ஜகந்நாதம், பண்டரிபுரம் முதலிய ஊர்களில் உள்ள சுவாமிகள் யார் தொட்டாலும் சாவதில்லை. கோவிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் தாங்களே நேரில் சுவாமியைத் தொட்டு தலையில் தண்ணீர் விட்டு புஷ்பம் போட்டு கும்பிடுகிறார்கள். அதே பெயருள்ள சுவாமிகள் நமது நாட்டில் நாம் தொட்டால் செத்துப்போய்விடுகிறது. சிரங்கம், சிதம்பரம், பேரூர், பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, கரூர் முதலிய முக்கிய க்ஷேத்திரங்களில் உள்ள சுவாமிகள் நாடார்கள் கோவிலுக்குள்போய் கும்பிட்டால் அந்கோவில்களும், சாமிகளும் சாவதில்லை. மதுரை, திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள கோவில்களும் சுவாமிகளும் மாத்திரம் நாடார்கள் போய் கும்பிட்டால் உடனே செத்துப் போய்விடுகின்றன. இப்படி சுவாமிகளின் சக்தியும் உயிரும் கோவில்களின் போக்கியதையும் ஊருக்கு ஒருவிதமாய் இருப்பானேன்? பிறகு பார்ப்பனருக்கு மாத்திரம் அந்த சுவாமியை உயர்ப்பிக்கும் சக்தி இருப்பானேன்?

## செலவு.

நமது வேதம், சுவாமி பூஜை வணக்கம், முதலியன சம்பந்தமான விஷயங்கள் இப்படி இருக்கிறதென்றால், இந்த லக்ஷணத்தில் இம்மாதிரி சுவாமியினாலும் கோவிலினாலும் நமது சுயமரியாதை எவ்வளவு தூரம பாதிக்கப்படுகிறது என்பதோடு நமது பணம் எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் கவனித்துப்பாருங்கள். சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்துமத சம்பிரதாயப்படிக்கு ஏற்பட்ட கோவில்களுக்கும் மடங்களுக்கும் வருஷம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் வரும்படி வருகிறது 2 கோடி ரூபாய் வரும்படி வந்தால் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு ஆகும். சாதாரணமாக திருப்பதிக்கு மாத்திரம் சர்க்கார் கணக்குப்படி வருஷம ஒன்றுக்கு 20 லக்ஷம் வரும்படி வருகிறதாக ஏற்படுகிறது. கணக்குக்கு வராமல் மகந்துகளுக்கும், கோவில அதிகாரிகளுக்கும் பூஜாரிகளுக்கும் போகும் பணங்களுக்கு அளவேயில்லை. யாத்திரைக்காரர்கள் காணிக்கையாகக் கொண்டுவரும் தொகைகளை அறிந்த மகந்து, கோவில் அதிகாரிகள் முதலியவர்கள் யாத்திரைக்காரர்களைக் கூப்பிட்டு "கோவில் கடாரத்தில் காணிக்கையைப் போட்டால் சர்க்காரார் எடுத்து ஜர்மன் யுத்தத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டி கட்டி விடுவார்கள்; மகந்துவிடம் கொடுத்தால்தான் சுவாமிக்குப் போய்ச்சேரும்; நீர் இவ்வளவு ரூபாய், இவ்வளவு நகை கொண்டுவருவதாக சுவாமி என்று சொப்பனத்தில் சொல்லிற்று" என்று ஏமாற்றி வழிப்பறி செய்வதில் கொள்ளைபோகும் பணம் இந்த 20 லக்ஷத்தில் சேர்ந்ததல்ல. இன்னமும் யாத்திரைக்காரன் ரயில் சார்ஜ் சில்லரைச்செலவு மெனக்கேடு தேங்காய் பழம் முதலிய செலவுகள் எத்தனை லட்சம் ஆகும் என்று கணக்குப்பாருங்கள்.

## திருவிழா.

இன்னும் உற்சவாதிகள், சுவாமிக்கும் அம்மனுக்கும் கலியாணம், சுவாமி தாசி வீட்டுக்குப்போதல், ஒரு காலை தூக்கி ஆடுதல், நரியை குதிரையாக்குதல் முதலிய திருவிழாக்களும் 10-மணுவு இடையுள்ள சுவாமியை 200 டன் இடையுள்ள தேரில் வைத்து 10000 பேர் இழுப்பதும், அதற்கு 50000-பேர் வேடிக்கை பார்க்கப் பல இடங்களிலிருந்து வருவதும் ஆகிய காரியங்களுக்கு ஆகும் செலவுகளும் சுவாமிகளுக்கு அபிஷேகம், பூஜை, சதிர், பாட்டுக்கச்சேரி, நகை, பட்டு பாவாடை புனுகு, ஜவ்வாது, பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ, முதலியவைகளின் செலவுகளும் எல்லாம் சேர்த்து இந்துமத சாமிகளின் பூஜைக்கும் உற்சவங்களுக்கும் மாத்திரம் தென் இந்தியாவில் வருஷத்திற்கு 25 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் செலவாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த 25 கோடி ரூபாயும் நாம் சுயமரியாதை அற்றுக் கிடக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் தினம் தினம் நமக்கு ஞாபகப்படுத்துவதற்கும் செய்யும் செலவே அல்லாமல் இதனால் வேறு என்ன பலனை அடைகிறோம்? இப்பேர்ப்பட்ட "இந்துமதம்" தான் சென்னை சட்ட சபையில் இந்த பணங்களுக்கு கணக்கு கேட்க ஏற்படுத்திய இந்து மத பரிபாலன மசோதாவினால் அடியோடு பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாம். இம்மாதிரி நமது சுயமரியாதையை ஒழிக்கும் "இந்துக்கள்" தான் "மதம் போச்சுது" "மதம் போச்சுது" என்று மாயக்கண்ணீர் விடுகிறார்கள் சாமி பூஜை, உற்சவம் முதலியதுகளில் நமது யோக்கியதையும் சுயமரியாதைக் கேடும் இப்படி இருப்பதோடு இந்துமதச்சடங்கு என்னும் பேரால் நமது தலையில் எவ்வளவு பளுவைச் சுமத்தி நமது பணம் எவ்வளவு கொள்ளை கொண்டு நமது பிறப்புரிமையான சுயமரியாதையை எவ்வளவு தூரம் நசுக்கி இருக்கிறார்களென்பதை கவனிப்போம்.

## இந்துமதச் சடங்கு.

இந்துமதம் என்பதாக ஒன்றை நாம ஒப்புக்கொள்வதால் நமது நிலை பிறவியிலேயே இழிவானதாகவும், இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக்கொள்வோரிலேயே ஒரு வகுப்பாருக்கு நாம் அடிமைகளாகவும

[இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க]

## நாகை ரெயில்வே தொழிலாளர் சங்கம்.

எழுமின்! சங்கத்தை நாடி உழைமின்!

தென்னிந்தியா ரெயில்வே இஞ்சினியரிங் P. W. டிபார்ட்மெண்ட் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள்:—

நமது ரெயில்வே கம்பெனியார் தங்களின் வேலை, சுலபத்தில் நடைபெறவேண்டி பல வகுப்புகளாகப் பிரித்து வைத்தாலும் நாம் அனைவரும் தொழிலாளர் என்ற முறையில் ஒரே சமூகமாகவும் ஒரே நிலைமை, கொள்கை முதலியவைகளில் நாம் வேற்றுமையாக இருக்கவில்லை. ஆனால் ரெயில்வே கம்பெனியின் லாபத்தை மாத்திரம் உத்தேசித்து நமது பலவிதக் குறைகளை கவனியாது சம்பளம், லீவு முதலிய அநேகமான உரிமைகளில் நமக்குள் பல வித்தியாசங்களைச் செய்து வருகின்றனர் என்பது வெள்ளிடைமலையாக விளங்கவில்லையா?

ஐரோப்பாவிலுள்ள தொழிலாளர்களைப் போல் நாமும் ஒன்று சேர்ந்து நமது சமூகத்தைப் பலப்படுத்தி மூலதனத்தை விருத்தி செய்தாலொழிய நாம் மனிதராக உலகில் வாழாது நடைப்பிணமாக கருதப்படுவோம்.

நமது சங்கம் உலகில் ஆரம்பித்த 8 வருஷங்களுக்குள் சில நன்மைகளை அடைந்திருக்கின்றோம். ஆனால் முதலாளிகள் ஒருக்காலும் தொழிலாளர்களாகிய ஏழைகளை கவனியார் என்பதும் கேவலம் மிருகங்களுக்குச் சமதையாக நடத்தி வருகின்றனர் என்பதும் எமது அனுபவம். ஆயினும் உலகத்தில் தோன்றியுள்ள சர்வ ஜாதி, மதம் முதலியவைகளை ஏற்படுத்திய பல பெரிய மகான்களும், தங்கள் புராணம், இதிகாசம், சாஸ்திரம், நீதி முதலியவைகளில் உலகிலுள்ள தரித்திர நிலைமையிலுள்ள ஜீவாத்மாக்கள் அனைத்தும் இகபர சுகங்களெய்தும் வண்ணம் உழைத்து மேல்கண்ட உண்மை அனுபவத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆகையால் நாமனைவரும் ஒன்றுபட்டு நமது பலதிறப்பட்ட குறைகள் நிவர்த்தியாகி நாமும் நமது பிற்கால சந்ததியாரும் நல்வாழ்வு அடையும்படி சகல இஷ்ட சித்திகளையளிக்கும் சங்கமெனும் தெய்வத்திருத்தாயைப் போற்றி ஒவ்வொரு ரெயில்வே தொழிலாளரும் தங்கள் சந்தாவைச் செலுத்திவந்தால், கோவில் கட்டுவது, அன்னமளிப்பது முதலியவற்றைவிட சிறந்த தர்மமாகுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குறிப்பு: எம்முடைய தும்ஒருசிலநண்பர்களினுடையதுமான முயற்சியால் நாகூர் முதல் அடியக்கமங்கலம்வரையிலுள்ள காங்கிசகோதரர்கள் சங்க அங்கத்தினராகி சந்தா செலுத்தி வருகின்றனர். மற்றும் திருவாரூர், அரந்தாங்கி, மாயவரம் தஞ்சாவூர் வரையிலுள்ள தொழிலாளர் அனைவரும் சங்கத்தில் சேரும்படி வேண்டுகிறோம். இவ்வித நல்ல காரியங்களுக்கு பலவித பிரட்டல்களுடன சில தீங்குகள் நேரிட்டாலும் கவனியாமல் அதனை லக்ஷியம் செய்யாமல் நமது கடமை அதாவது உத்தம கைங்கரியம் என்று நினைத்தும், ஒரு நாள சம்பளமாகிய பிரவேச கட்டணத்தையும் சந்தாவையும் கொடுத்தும் அஞ்சாது ஆதரிக்கும்சங்கத்தை நாடுங்கள்.

எமது வருகையுடன் பிரசங்கத்தை கேட்கவேண்டினும் அவ்வித ஊழியமே செய்யக் கோருகிறோமாகையால் எமக்கு தெரியப்படுத்திக்கொள்ளலாம்.

D. கிருஷ்ணசாமி பிள்ளை, தலைவர்.

பத்திராதிபர் குறிப்பு:—

தொழிலாள சகோதரர்கள் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி நன்றாய்ப் பேசுவாரா, வரதராஜுலு நாயுடு பெரிய தேச பக்தரா, கலியாணசுந்தர முதலியார் தொழிலாள பக்தரா, நாயக்கர் மேதாவியா என்கிற இது போன்ற விவகாரத்திற் கலந்துகொண்டு கட்சி பேசுவதையும், இதற்காகச் சண்டை போட்டுக்கொள்வதையும் அடியோடு மறந்துவிட்டு சங்கத்தலைவர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள் உபதேசப்படி நடந்து சங்க நலத்தை மாத்திரம் கவனித்து வருவார்களேயானால் அடுத்த சட்ட சபைத் தேர்தலில் எல்லா அரசியல் கூட்டத்தாரும் எல்லாச் சமூக திருத்தக்காரரும் தொழிலாளர் கால்களில் வந்து விழுவார்கள் என்பதும் அப்பொழுது தொழிலாளர்கள் சுயமரியாதையோடு வாழமுடியும் என்பதும் உறுதி! உறுதி!!

## கள்ளக்குறிச்சியில் ஆதித்திராவிடர் கூட்டம்.

தென்னிந்திய ஆதித்திராவிட பொது ஜன ஊழியர் சபை அங்கத்தினரின் கூட்டம் ஒன்று 30-12-26-ல கள்ளக்குறிச்சியில் ஸ்ரீமான் ஜே. ஸ்ரீநிவாச ராவ் பி. ஏ. அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. சுவாமி சிரத்தானந்தரின் வரலாற்றைப் பற்றியும், ஏழை மக்களுக்காக அவர் உழைத்ததைப்பற்றியும் முறையே தலைவரவர்களும் ஸ்ரீமான் சுவாமிநாதனும் எடுத்துக் கூறப்பட்ட பின் சுவாமி சிரத்தானந்தர் படுகொலையுண்டிறந்தமைக்கு விசனிக்கிறதாயும் ஸ்வாமிஜீயின் குமாரருக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதாயும், சொஸைட்டியின் பிரசிடெண்டாக ஸ்ரீமான் என். ராஜ் பி. ஏ., பி. எல்., எம்.எல்.சி. அவர்களை நியமிக்கும்படி கேட்டுக்கொள்வதாயும் இந்த ஜில்லாவிலுள்ள ஆதித்திராவிடர்களின் குறைகளை அரசாங்கத்தாருக்கு அறிவிக்க ஜனவரி மாதக் கடைசியில் ஒரு கூட்டம் நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கிறதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று எம். சுவாமிநாதன் அறிவிக்கிறார்.

## கும்பகோணம்.

ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா இன்று பகல் 12 மணி ரயிலில் இவ்விடம் வந்தார். 3 மணிக்கு சுமார் 300 பேர் உடன்தொடர திராவிடத் தலைவர்களுக்கு ஜே! என்ற கோஷத்துடன் ஊர்வலம்செய்யப்பட்டது. திராவிடர் முன்னேற்ற விஷயமாய் உருக்கமான சொன்மாரி பொழிந்தபின்னர் இரவு 9 மணிக்கு கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கம்.

பட்டுக்கோட்டையில் 2-1-27-ல் நிறுவப்பட்டது. இதன் முக்கிய கொள்கைளாவன:—சுயராஜ்யம பெறுவதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெறுவதும், கட்டாயம் கதர் அணிவதும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், சுயமரியாதையைக் காத்தல் முதலியன. போஷகர் ஸ்ரீமான் ஏ. பி. எல். என். வி. நாடிமுத்து பிள்ளை அவர்கள், தலைவர் ஸ்ரீ எஸ். வேணுகோபால் நாயுடுகாரு பி. ஏ. பி. எல், உபதலைவர், ஸ்ரீ கு. பா. கோவிந்தசாமி செட்டியார், காரியதரிசிகள் ஸ்ரீமான்கள் ஏ. ரத்தினசாமி தேவர், வி. மாணிக்கம் பிள்ளை, உப காரியதரிசி ஸ்ரீ ரெத்தினசாமிஆச்சாரி, பொக்கிஷதார், ஸ்ரீ எஸ். கே. சிதம்பரம் செட்டியார், நிர்வாக சபையினர் ஸ்ரீமான்கள் ஏ. வி. தேவாசீர்வாதம் பிள்ளை, எம். மாரிமுத்து, கே. ஜி. தீனதயாள நாயுடு, வைத்திலிங்கம், கணக்கு பிள்ளை மு. சோமசுந்தரம் செட்டியார், ஏ. ராமசாமி முதலியார், வி. காத்தமுத்து பிள்ளை, எம். அப்பாவு பிள்ளை, எஸ். கே. ஆர். ஏ. ரத்தினம் பிள்ளை ஆகியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.


## பார்ப்பனரல்லாதார் நலவுரிமைச் சங்கம், மாயவரம்.

மாயவரத்தில் பார்ப்பனரல்லாதார் சங்கம் நிறுவப்பட்டது. இதன் முக்கிய கொள்கைகளாவன:—அரசியலில் இருந்து விலகி சமூக சமத்துவத்தை ஏற்படுத்துதல், பார்ப்பனப் புரோகிதரை விலக்கல், ஆலயவழிபாடு முதலியவைகளில் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்தல் மற்றும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆக்கமளிக்கும் எல்லா அமைப்புகளையும் இயக்கங்களையும் தகர்த்தல், "திராவிடன்", "குடி அரசு", "தமிழ்நாடு" பத்திரிகைகளை ஆதரித்தல் முதலியன.

நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஸ்ரீமான்கள்.—O K ராமசாமி செட்டியார், M கலியாணசுந்தர முதலியார், T சங்குண்ணி நாயர், G அண்ணாமலை பிள்ளை, G முருகேசம் பிள்ளை, S மாணிக்கம் பிள்ளை, A கடேசம் படையாச்சி, G நாராயணசாமி பிள்ளை V சுப்பிரமணிய பிள்ளை, V சுவாமிதுரை படையாச்சி R முத்தப்ப பிள்ளை, S V லிங்கம் பிள்ளை, C நடராஜன். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இம்மாதக் கடைசியில் மாயவரத்திற்கு வருவார்.

## தூத்துக்குடி.

தூத்துக்குடி ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்கள் ஞாபகார்த்த வாசகசாலையின் முதலாவதாண்டு வருடப் பூர்த்திக்கொண்டாட்டம் நாளது அக்ஷயவருஷம் தைமீ 3உ (16-1-27) ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு இவ்வைபவத்துக்கெனச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட லைப்ரரி ஹாலில் பாளையங்கோட்டை ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் B. A. M. L. C. அவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும் என்று காரியதரிசிகள் அ. து. கலியாணசுந்தரம் ச. விவேகானந்த நாடார் அறிவிக்கிறார்கள்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு.

அக்ஷய-ஹு மார்கழி-மீ 25-உ


## இனிச் செய்ய வேண்டிய வேலை.

மதுரை மகா நாட்டைப்பற்றிப்பாராட்டுக் கடிதங்கள் வந்த வண்ணமா யிருக்கின்றன. மகா நாட்டிலிருந்து பார்ப்பனரல்லாத மக்கள் உணர்ச்சியுடன் இருக்கிறார்கள் என்பதும், சுய மரியாதைதாகமுள்ளவர்களாக இருக்கிறார்களென்பதும், பார்ப்பனர்களின் ஆயுதமான போலிச் சுயராஜ்ஜியமாயையில் விழுந்து தங்கள் சமூகத்திற்குக் கேடு சூழும் கோஷ்டியில் சிக்கவில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கி விட்டது. ஆனால் இந்த விளக்கம் மாத்திரம் போதுமா? இதனாலேயே நாம் சுயமரியாதை அடைந்து விட்டோமா? என்பதை யோசிக்க வேண்டும். சமீபத்தில் நடந்த தேர்தல்களில் பார்ப்பனர்களின் சூழ்ச்சியினாலும், விஷமப் பிரசாரத்தினாலும் சுவாதீன புத்தியுள்ள பல பார்ப்பனரல்லாதார் தோல்வியுற்றுவிட்ட காரணத்தாலும், சுயராஜ்ஜியக் கட்சி என்னும் பார்ப்பனக் கட்சியின் புரட்டுகளைக் கண்டு சகியாததாலும், பார்ப்பன ஆதிக்கத்திற்காக உள்ள காங்கிரஸ் சபையினிடம் உள்ள அதிருப்தியினாலும் திடீரென்று மதுரை மகா நாட்டிற்கு இவ்வளவு பிரதிநிதிகள் வரவும் உற்சாகம் காட்டவும் முடிந்ததே அல்லாமல் முழுதும் ஏற்கனவே ஏற்பட்டுள்ள உற்சாக மென்றாவது நிரந்தரமாயிருக்கக் கூடிய உற்சாக மென்றாவது சொல்லிவிட முடியாது என்றே நினைக்கிறோம். நமது மக்கள் பார்ப்பன சூழ்ச்சியில் விழுகாதிருக்க வேண்டுமானாலும், நமது மக்களின் முன்னேற்றத்திற்கு அநுகூலமான மகா நாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமானாலும் தலைவர்களும் தொண்டர்களும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். பிரசாரங்களைச்செய்ய வேண்டியதைப்பற்றியும், அமைப்புவிஷயங்களைப் பற்றியும் சென்ற வாரத்தில் எழுதி இருக்கிறோம். அதைப்பற்றி இவ்வாரத்திலும் எழுத வேண்டியதில்லை. தவிர மகா நாட்டிற்கு ஒவ்வொரு ஜில்லா தாலூகாவிலிருந்தும் தக்க பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள் வந்து போயிருக்கிறார்களானதால் அவர்கள் தங்கள் தங்கள் ஜில்லாவினும் தாலூகாவினும் ஜில்லா தாலூகா மகாநாடுகள் கூட்ட வேண்டும். அதை ஆதாரமாக வைத்தே ஜில்லா முழுவதும் அமைப்புகளை ஏற்படுத்தச் சவுகரியமாயிருக்கும். அந்தந்த இடங்களில் இப்போது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தார் இந்த மகா நாட்டு வேலையை எடுத்துக்கொண்டு ஆங்காங்குள்ள பெரியோர்களைப் பிடித்து மகா நாட்டை கூட்டுவிக்க ஏற்பாடு செய்யவேண்டும். திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் இப்போது அவசரமாய் ஜில்லா மகா நாடுகள் கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போதே அந்தந்த ஜில்லாக்களில் இருக்கும் தென்னிந்திய நலவுரிமைச்சங்க கிளை ஸ்தாபனத் தலைவர்கள் இதை உடனே கவனிக்க வேண்டுமாய் வற்புறுத்துகிறோம்.

### பொங்கல் வசூல்

பார்ப்பனரல்லாத வாலிபர்களே!

பொங்கல் தினங்களில் உண்டி மூலம் வீடு வீடாய்ச்சென்று பணம் வசூல் செய்யுங்கள்.

பார்ப்பனரல்லாத பெரியோர்களே! வாலிபர்கள் உங்களைத்தேடி உண்டிகை கொண்டுவந்தால் இல்லையென்று சொல்லாமல் உங்களுக்குத் தோன்றியதை உண்டியில் போடுங்கள். வசூலான தொகையை அந்தந்த ஜில்லா ஸ்தாபனங்களுக்கு தெரியப்படுத்தி அவர்கள் கட்டளைப்படி உபயோகப்படும்.

தேர்தல்களில் நிற்பதும் தேர்தல்களுக்குச் செலவு செய்வதும் தேர்தல்களின் போது ஊரூராய்ச் சென்று ஓட்டர்களை ஏமாற்றுவதுமே தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தார் வேலையானால் இந்தச் சங்கத்தைவிட காங்கிரஸே மேலானது என்று சொல்லுவோம். உண்மையிலேயே பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்கும், முன்னேற்றத்திற்கும் உழைப்பதானால் குறைந்தது இந்த மாதத்திலேயே இரண்டு மூன்று ஜில்லா மஹா நாடுகளாவது கூட்ட வேண்டுமென்று விரும்புகிறோம். சேலம், கோயமுத்தூர், திருச்சி ஆகிய மூன்று ஜில்லாக்காரர்களுக்கும் இந்த மாதத்தில் கூட்ட ஆக்ஷேபனை இருக்காது என்றே நினைக்கிறோம். மற்றபடி அந்தந்த தாலூகாக்காரர்களுக்கும்கூட்டவசதி இல்லாமற் போகவில்லை. ஆதலால் இந்த மூன்று மாதத்திற்குள் இந்த வேலை முடிந்து, கதர், பார்ப்பன ஆதிக்கப் புரோகிதத்தை ஒழித்தல், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு இவைகளில் தக்க முன்னேற்றம் ஏற்படும்படி செய்ய வேண்டும். இதில் பார்ப்பனரல்லாத எவ்வித ராஜீய அபிப்பிராய பேத முடையவர்களாயிருந்தாலும் இந்த மேற்கண்ட கொள்கைகளை ஒப்புக் கொள்ளக்கூடிய யாரையும் அக்கிராசனராக அழைப்பதில் ஒன்றும குற்றமில்லை என்றே நினைக்கிறோம். வீண் செலவும் ஆடம்பரமும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்பதையும் ஞாபக மூட்டுகிறோம். மகாநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும் கதர் உடுத்த வேண்டும் என்கிற ஒரு நிபந்தனையே மதுரை மகா நாட்டில் நிறைவேறிய கதர் திட்டத்திற்கு மிகுதியும் துணைப் போவதாகும். அன்றியும் கிராமங்களில் தொழிலுமற்றுச் சுயமரியாதையுமற்று இரண்டு நாளைக்கு ஒரு வேளைக் கஞ்சிக்கும் வகையற்றுப் பட்டினி கிடந்து தவிக்கும் பார்ப்பன ரல்லாத ஏழை மக்களின் பசியைத் தீர்த்து பட்டினிக்காக அவர்கள் இழக்க நேரிடும்கற்பையும் மனச்சாட்சியையும் காப்பாற்ற இது ஒரு ஒப்பற்ற சாதனமாகவும் இருக்கும். ஆதலால் கதரைப் பிரதிநிதிகளுக்குக் கட்டாயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். தவிர வரப்போகும் பொங்கல்பண்டிகைக்கு எல்லாரும் கதரே உபயோகிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

### நல்ல இடி.

சேலம் பார்ப்பனருக்கும் அவர்களது வால் பிடித்துத் திரிபவர்களுக்கும் நமது முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் நல்ல இடி கொடுத்ததாக தெரிந்து நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். ஆனாலும் சாண்டா மிருகத்தோல் படைத்த அப்பார்ப்பனருக்கும் அவர்களது அடிமைகளுக்கும் அது கொஞ்சமாவது சொரணை உண்டாகுமா என்பதுதான் நமது கேள்வி?

அதாவது கனம் சுப்பராயனவர்களை சேலம் பார்ப்பனர்கள் தங்கள் டிக்கட் பாக்கட்டில் போடுவதற்காக "லிட்டரரி சொசைட்டி" என்கிற ஒரு பார்ப்பனக் கூட்ட நிலையத்தில் ஒரு கூட்டம் கூட்டி அவரை வானமளாவப் புகழ்ந்தும் இதற்குமுன் மந்திரியாய் இருந்தவர்களை ஆசைதீர வைதும் பேசினார்களாம். இதற்குப் பதிலளிக்குமுகத்தான் கனம் சுப்பராயன் இம்மாதிரி ஒருவரை, உத்தியோகம்விட்டுப் போனபின் வைவது இழிவு என்றும், நாளைக்கு என்னையும்! இப்படித்தான் வைவீர்கள் என்றும், இப்படிச் செய்வது உங்களுக்கு யோக்கியதை அல்லவென்றும் சொன்னாராம். வைததில் பெருமைகொண்டவர்களும் வைததைக் கேட்டு ஆனந்தம் கொண்டவர்களும் வெட்கித் தலைகுனிந்தார்களாம். இதோடு இந்தப் புத்தியை விட்டுவிடுவார்களா?

### சென்னிமலை.

ஜனவரி-மீ 16உ சென்னிமலையில் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஆலய பரிபாலன சபை ஆண்டுவிழா ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும்.

## முக்கிய கவனிப்பு.

**சந்தா பாக்கியுள்ளவர்களுக்கு அடுத்த வாரம் முதல்கொண்டு பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.**

## பார்ப்பனர் விஷமப்பிரசாரம்.

மதுரை முனிசிபல் சேர்மனுக்கு மீ 1-க்கு ரூ 9000 சம்பளம் கவுன்சிலர்களால் நிர்ணயிக்கப் பட்டவுடன் அச்சேர்மென் ஒரு பார்ப்பனரல்லாதாரா யிருப்பதோடு பார்ப்பனர்களின் தாளத்திற்குத் தகுந்தபடி ஆட மறுப்பவரா யிருப்பதால் நமது பார்ப்பனர்கள் ஒப்பாரி வைத்தழுது கூச்சல் போட்டு விஷமப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். மதுரை முனிசிபாலிட்டியானது சுமார் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளும், லக்ஷத்து நாற்பதினாயிரம் ஜனத்தொகையும், சுமார் 3, 4 லக்ஷ ரூபாய் வரும்படிக்கு மேற்பட்டதுமான பெரிய முனிசிபாலிட்டி. அதன் சேர்மென் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடு பாரிஸ்டர் பரீக்ஷை தேறினவரும் பாரம்பரியமாய் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஒரு கண்ணியமான கனவான். மதுரை மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் சேர்மேனாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவரது வேலையையும் மதுரைப் பட்டணத்தின் நிலைமையையும் உத்தேசித்து பெரும்பான்மையான கவுன்சிலர்களால் மீ 1-க்கு ரூ 9000 கொடுக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டு அந்தப்படி தீர்மானித்து இருக்கிறார்கள். இதனால் பொறாமைகொண்ட பார்ப்பனர்களிற் சிலர் தங்கள் ஜாதிப் புத்திக்கு ஏற்ப "பணம் போச்சே" "பணம் போச்சே" என்று மார்படித்துக் கொள்ளுவதின் அர்த்த மென்ன? இந்தப் பார்ப்பனர்கள் தங்களும் தங்களது சிஷ்யர்களுடனும் வெளியேறினதாகச் சொல்லும் வெட்கங்கெட்ட வெளியேற்றத்தின் அர்த்த மென்ன? இந்தப் பார்ப்பனர்களுக்கும் அவரது கூட்டத்தாருக்கும் உண்மையிலேயே பணம் நஷ்டமாகிறதே என்கிற கவலை இருக்குமானால் மாடு மேய்க்கக்கூடத் தெரியாத விளையாட்டுப் பிள்ளைகள் எல்லாம் B. A., B. L., என்கிறதாக பேர் வைத்துக்கொண்டு ஒரு பலகையை போட்டுக்கொண்டு ஜட்ஜ், முனிசீப் மேஜிஸ்திரேட், இவர்களை சரிப்படுத்திக்கொண்டு மீ ரூ 500, 1000, 5000, 10000, என்பதாக ஏழைகளின் தலையிலும் முட்டாள்களின் தலையிலும் கை வைத்து கொள்ளை அடித்து நாட்டைப் பாழாக்கி "அந்நிய அக்கிரம ஆட்சிக்கு" ஒற்றர்களாயிருக்கிறார்களே அதைப்பற்றி இவர்கள் கவனிக்கக் கூடாதா? சராசரி மாதத்தில் நாலுநாள் வேலைகூட இல்லாத வெறும் வேலையான சட்ட சபைத் தலைவர் உத்தியோகத்திற்கு மீ 1-க்கு ரூ 2000, 3000 சம்பளம் வாங்குகிறார்களே அதுவும் இந்த வருஷம் பார்ப்பனர் கட்சியான சுயராஜ்ஜியக் கட்சியாரே தங்களுடைய பக்த கோடிகளில் ஒருவரை நியமித்தார்களே அதில் ஏன் மீ ரூ 1900 குறைத்துக் கொள்ளக்கூடாது? இந்த 2000 ரூபாய்க்கு வேலை என்ன இருக்கிறது? 128 மெம்பர்களில் இந்த மெம்பரும் ஒருவர்தானே. அவர்களுக்குள்ள மனக்கேடு தானே இவருக்கும்; இதைப்பற்றி எவருக்காவது "பணம் போச்சே, பணம் போச்சே" என்கிற விசாரமிருக்கிறதா? மற்றுமுள்ள முனிசிபாலிட்டிகளில் தான் இவர்களுக்கு அதிக கவலை என்று வைத்துக் கொண்டால் ஈரோடு முனிசிபாலிட்டியில் உள்ள சேர்மன் முனிசிபல் சொத்தைக்கொள்ளை அடிப்பதும் ரிகார்டுகளைத் திருத்தி பணம் திருடுவதும், கவுன்சிலில் பாசாகாத பொய்த்தீர்மானங்களை மினிட் புஸ்தகத்தை வீட்டிற்குக் கொண்டுபோய் புகுத்தி முனிசிபல் சொத்தை அநுபவிப்பதும் தனது, சகாக்களான கவுன்சிலர்களுக்கும் முனிசிபல் சொத்தை வாரி இறைப்பதுமான அநேக அக்கிரமங்கள் செய்யப்படுகின்றன. இதை எந்தப் பார்ப்பனராவது அவர்களது கட்சியாவது கவனிக்கின்றதா? எந்தப் பார்ப்பனப் பத்திரிகையாவது பார்ப்பன நிருபங்களாவது கண்டித்ததா? அல்லது மந்திரிகளாவது கவனிக்கின்றார்களா? ஏன் கவனிப்பதில்லை என்று பார்த்தால் இத்திருடர்கள் பார்ப்பனரின் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடிவிடுகிறார்கள். பார்ப்பன தேர்தலுக்கு வேலை செய்து வருகிறார்கள். அதோடு சில வெள்ளைக்காரருக்கும் பங்கு கொடுத்து விடுகிறார்கள், வெள்ளைக்காரர்கள் தயவும் பார்ப்பனர்கள் தயவும் இருந்து விட்டால் உலகத்தில் என்ன அக்கிரமம் செய்தாலும் கேள்வி இல்லாமற் போய்விடுகிறது. மந்திரிகளுக்கோ பார்ப்பன சிபார்சுகள் வந்துவிடுகிறது. அவர்களும் தங்களது வாழ்வு நீர்மேற் குமிழியாயிருப்பதால் பயப்படுகிறார்கள். இப்படி இன்னமும் எத்தனையோ இலாகாக்களில் உபயோகமில்லாமல் அவசியமு மில்லாமல் எத்தனையோ ஆட்கள் இருந்துகொண்டு மீ 1000, 5000 கொள்ளை அடிப்பதற்குச் சமானமாகவும் மற்றும் பல பெயரினாலும் கண்ணியமற்ற வழிகளில் நின்கிறதைப்பற்றி இந்தப்பார்ப்பனருக்கு ஒரு சிறிதும் கவலை இல்லாமல் வீண் வேஷம் போடுவதை ஜனங்கள் நம்பி ஏமாந்து போகிறார்கள். அப்படி இந்தப் பார்ப்பனருக்கு உண்மையில் அக்கரை இருக்குமானால் மந்திரிகள் சம்பளத்தை மீ 1000 ரூபாய் ஆக்கினால்— ஆக்க தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சித்தால் இவர்கள் யோக்கியர்கள் தான். மதுரை சேர்மெனைவிட இந்த மந்திரிகளும் சட்ட சபைத் தலைவரும் எந்த விதத்திலும் அதிக யோக்கியதாம்சமுடையவர்கள் அல்ல என்பதை சிறு பிள்ளைகள் முதல் யாரும் ஒப்புக்கொள்ளக் கூடியது தான். இதை யெல்லாம் விட்டுவிட்டு யாராவது தங்களுக்கு அடிமைப்படவில்லையானால் அதற்காக கூப்பாடு போட்டு ஜனங்களை ஏமாற்றுவதென்பதை பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரம் என்பதல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

---

## தஞ்சை ஜில்லா போர்டை பார்ப்பன அக்கிரஹாரமாக்கச் சூழ்ச்சி.

தஞ்சை ஜில்லா போர்டைப்பற்றி பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் விஷமப் பிரசாரங்கள் செய்து வருகிறார்கள் என்பது பார்ப்பனப் பத்திரிகைகளைப் பார்ப்பவர்களுக்கு விளங்காமற் போகாது.

ஆனால் அதன் காரணம் என்ன என்பதை வெகுபேர்கள் அறியாமல், விஷமப் பிரசாரங்களை நம்பி ஏமாந்துபோவார்கள் என்றே நினைக்கிறோம். தஞ்சை ஜில்லா போர்டுக்கு இப்பொழுது பிரசிடெண்டாய் இருக்கும் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்திற்கு முன் ஒரு அய்யங்கார் பார்ப்பனர் அதாவது ஸ்ரீமான் வி. கே. ராமாநுஜாச்சாரியார் என்பவர் பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் தஞ்சை ஜில்லா தாலூகா போர்டுகள் முழுதும பார்ப்பன ஆதிக்கமாகவும், பார்ப்பனர்கள் அக்கிரஹாரமாகவும், பார்ப்பனர்கள் சாப்பிடும் அன்ன சத்திரமாகவும் இருந்து வந்தது யாவரும் அறிந்ததே. ஆனால் அந்தக் காலத்தில் பார்ப்பனப் பத்திரிகைகள் அவரைப் புகழ்ந்தது வானம்கூட ஓட்டையாய்ப் போயிருக்கும். ஸ்ரீமான் பன்னீர்ச் செல்வம் வந்தபிறகு பார்பபன தனி ஆதிக்கத்தை ஒழித்து எல்லோருக்கும் பங்குஇருக்கும்படி செய்து பார்ப்பனரல்லாதாருக்கும் சௌகரியமுண்டாகும்படி செய்திருக்கிறார். உதாரணமாக ஒரத்தநாடு சத்திரத்திலுள்ள ஒரு தர்மப் பள்ளிக்கூடமானது (அதாவது சாப்பாடு போட்டு சம்பளமில்லாமல் சொல்லிக் கொடுக்கும் உயர்தரப் பள்ளிக்கூடம்) வெறும் பார்ப்பனப் பிள்ளைகளும் பார்ப்பன உபாத்தியாயருமே அடைந்து இருக்கும்படி இருந்தது. இப்பொழுது எல்லா வகுப்புப் பிள்ளைகளும் சாப்பிடும்படியாகவும், உபாத்தியாயர்களாகும்படியாகவும் செய்யப்பட்டிருக்கிறது.

திருவையாற்றில உள்ள சமஸ்கிருத காலேஜ் என்பது சாப்பாடும் போட்டு சமஸ்கிருதமும் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. இது முழுதும் அய்யங்கார அக்கிரஹாரமாகவும் அய்யங்கார் பிள்ளைகள் சாப்பிடும் தர்ம சத்திரமாகவும் இருந்து வந்தது. இப்போது கொஞ்சம் பாகம் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் சாப்பிடவும் அய்யங்கார் அல்லாத பார்ப்பன உபாத்தியாயர்கள்

## மகாநாட்டு உபந்நியாசங்களும், பார்ப்பனரல்லார் பத்திரிகைகளும்

இம்மாதம் நடந்த மகாநாடுகளில் உபசரணை அக்கிராசனர், மகாநாட்டுத் தலைவர் ஆகியவர்களின் பிரசங்கங்களைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகள் தங்கள் ஆதிக்கத்திற்கு அநுகூலமாய் பேசியவற்றையும் பேசினவர்களையும் புகழ்ந்தும் அதற்கு விரோதமாய் பேசினவர்களை இகழ்ந்தும் எழுதியிருக்கின்றன என்றாலும் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளில் பெரும்பாலும் தங்களுக்கென கொள்கையும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாமல் அவற்றையே பின்பற்றித் திரிகின்றன. இதற்காக பொதுமக்கள் பணமும் நேரமும் எவ்வளவு வீணாய்ப்போகிறதென்பதைக் கவனிப்பவர்களுக்கு துக்கம் ஏற்படாமலிருக்கமுடியாது.

சில பத்திரிகைகள் "பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத்தலைவர் ஒத்துழைப்பைப்பற்றி பேசிவிட்டார் ஆதலால பார்ப்பனரல்லாதாருக்கு அவமானம ஏற்பட்டுவிட்டது" என்பதாக அளவுக்கு மீறி துக்கப்படுவதாகவும் வெட்கப்படுவதாகவும் வேஷம்போட்டிருக்கின்றன. ஆனால் பார்ப்பனர்களில் சிலர் அதாவது மாதம் 5000, 10 000 சம்பளம் வாங்கியவர்களும் தங்கள் வீட்டு பூனைக்குட்டிக்குமுதல் சர்க்காரில் மாதம் 500, 1000, 2000, 3000 உத்தியோகம்பெற்று கொள்ளை அடிக்கிறவர்களும் ஒன்று சேர்ந்து மிதவாத மகாநாடு என்பதாகக் கூட்டி "சர்க்காரோடு ஒத்துழைக்கவேண்டும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் சர்க்கார் பெயர் வைக்கவேண்டும்" என்றும் பேசிக்கொண்டதைப்பற்றி இந்த ரோஷமுள்ள, தேசாபிமானமுள்ள, சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் பத்திரிக்கைகள் ஒன்றும் எழுதவேயில்லை என்றால் இவர்களின் தேசாபிமானத்தையும், சுயமரியாதையையும் என்னவென்று சொல்வது என்பது நமக்குத் தெரியவில்லை.

இதுவரை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் மிதவாதப் பார்ப்பனர்களைப் பின்பற்றி ராஜ விசுவாசத் தீர்மானம் என்பதாக வருஷாவருஷம் பல்லவி பாடிவந்த ஒரு தீர்மானத்தை இவ்வருஷம் தீர்மானிக்கப்படவில்லை என்பதை ஒரு பார்ப்பனரல்லாத "தேசியவாதியும்" அவர்களது பத்திரிகையும் பாராட்டவே இல்லை. நம் கூட்டத்திலேயே இப்படி ஆட்கள் மலிந்திருக்கும்போது இந்த சமூகம் சுயமரியாதை பெறுவது சுலபமான காரியமாவென்று கேட்கிறோம்? தவிர, அஸ்ஸாம் காங்கிரசின் உபசரணை அக்கிராசனரின் பிரசங்கமானது எவ்வளவு கேவலமானதென்றும் பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வளவு இழிவையும் அவமானத்தையும் கொடுக்கத்தக்கதென்பதையும் ஒரு பார்ப்பனரல்லாத "தேசிய பத்திரிகை"யாவது கவனித்ததாகச் சொல்லமுடியவில்லை. உபசரணை அக்கிராசனர் ஸ்ரீ பூக்கன் ஒரு பார்ப்பனர். அதாவது ஆரியரென்று சொல்லிக்கொள்ளுபவர். அவர் தனது பிரசங்கத்தில் ஆரியரல்லாதார் (பார்ப்பனரல்லாதார்) ஆகிய நம்மைப்பற்றி கூறியிருக்கும் இழிமொழிகளும், நம்மை அசுரரென்று குறிப்பிட்டிருப்பதும், நமது அரசர்களை அசுர அரசர்கள் என்று குறிப்பிட்டிருப்பதும், நமது கலாஞானம் வித்தை பண்டை வழக்க ஒழுக்கம் நமது நாகரீகம் முதலியவைகளை இழிவுபடுத்தி இருப்பதும், அவற்றைத் தாங்கள் ஒழித்ததையே தங்களது பெருமையாகக் குறிப்பிட்டிருப்பதும், சங்கராச்சாரியார், மத்துவாச்சாரியார் முதலிய ஆரிய மதஸ்தாபகர்கள் நமது கலை, பண்டைல ஒழுக்கம், நடையுடை பாவனை, நாகரீகம் முதலியவைகளை அழித்து வெற்றிபெற்றதையும், பார்ப்பன ஆதிக்கம் வேரூன்றினதையுமே பெருமையாகப் பேசியிருக்கிறார். "தமிழ்நாடு அரசியல்" மகாநாட்டின் அக்கிராசனர் ஸ்ரீமான் கே.வி. ரங்கசாமி அய்யங்காரும் தனது அக்கிராசனப் பிரசங்கத்தில் இதேமாதிரியாகவே பார்ப்பனரை உயர்த்தியும் பார்ப்பனரல்லாதாரை இழிவுபடுத்தியுமே பேசியிருக்கிறார். இதுகள் ஒன்றும் நமது "தேசிய பத்திரிகை"களுக்குத் தெரிவதில்லை பார்ப்பனரல்லாதார் எதுபேசினாலும், எழுதினாலும் குற்றமாகவே தோன்றுவதும, பார்ப்பனர் நம்மை எவ்வளவு இழிவாகவும் தாழ்வாகவும் பேசினாலும் அது தேசியமாகத்தோன்றுவதும் தான்பார்ப்பனரல்லாத்தேசியவாதிகளுக்கும் அவர்களது பத்திரிகைகளுக்கும் ஜன்மக்குணமாய் போய்விட்டது. வெட்கம்! வெட்கம்!! இதைவிட வெட்கம்!!! என்ன?

---

பிழைக்கவுமாய் இருக்கிறது. மற்றும் பல பெண் பள்ளிக்கூடங்களும் பல சத்திரங்களும், பல உத்தியோகங்களும், பார்ப்பனரல்லதாரும் பிழைக்கும்படி செய்யப்பட்டிருப்பதால் பார்ப்பனர்கள் ஓலகூச்சல்போடுகிறார்கள். இதற்கேற்றாற்போல், ராவணனைக்கொன்று விபீஷணனுக்கு பட்டம் தருவதாய் ராமன் வாக்களித்து ஆட்களைச்சேர்த்துக்கொண்டதுபோல் இங்கும் சில விபீஷணர்களுக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு பட்டம் கட்டுவதாய் பார்ப்பனர்கள் வாக்குறுதிகொடுத்து அவர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களது உதவியால் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தை ஒழித்து அய்யங்கார் ஆதிக்கத்தில் இருந்ததுபோல் தஞ்சை ஜில்லா போர்டையும் தாலூகா போர்டுகளையும் பார்ப்பன அக்கிரஹாரமும் அன்ன சத்திரமும் ஆக்கப் பார்க்கிறார்கள். மந்திரியும இவர்களால் ஏமாற்றப்பட்டுப் போவார் போலவே காண்கிறது. இதற்கேற்ற விபீஷணர்கள் பலரும் பட்டத்திற்கு எதிர்பார்த்து தலையை நீட்டிக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. பாமர ஜனங்கள் பைத்தியகாரராயிருக்கும்வரை பார்ப்பன ஆதிக்கத்திற்கு யோகம் தான்.

---

## பார்ப்பனரல்லாதார் தலைவர்களுக்கும் கனவான்களுக்கும் ஓர் வேண்டுகோள்.

பெருமை பொருந்திய தலைவர்களே!. கனவான்களே! உங்களுடைய கட்டுப்பாட்டுக் குறைவினால் நீங்கள் எடுத்த காரியம் முற்றிலும் ஜெயமாகாத நிலைமை ஏற்பட்டு வருவது பிரத்தியக்ஷமல்லவா? நீங்கள் இதுவரை நடத்தியதாகச் சொல்லுகிற மகாநாடுகள் எல்லாம் இப்போது பத்தாவது மகாநாடு என்று மதுரையில் கூடிய மகாநாட்டைப்போல இவ்வளவு சிறப்பானதும் ஜனப்பிரதிநிதிகள் உள்ளதும் இவ்வளவு உற்சாகம் நிறைந்ததும் ஒவ்வொருவர் மனதிலும் ஓர்வித உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதுமான தன்மை பொருந்தியவையாகுமாவென்பதை நீங்கள் யோசித்துப் பார்ப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. நிறைவேற்றிய தீர்மானங்களோ எதிர்கால வாழ்வை அசைக்கமுடியாத வெகு உன்னதமாக்கக்கூடியவைகள் நிறைவேற்றி இருப்பதுதான் மெத்தவும் சந்தோஷம். இத்தீர்மானத்தை எல்லாம் நீங்கள் காரியத்தில் நடத்திவைப்பதிலிருந்துதான் காரிய சித்தி என்பது நாம் சொல்லத் தேவையில்லை. ஏதோ மகாநாட்டுக்குப்போனோம் நல்ல தீர்மானங்களாகச் செய்தோம் என்று சொல்லிவிட்டு வாளாவிருந்தால் அதின் பலனையும் நீங்களே அனுபவிப்பீர்கள் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்- நாயக்கர் இருக்கிறார்கள், "குடி அரசு" இருக்கிறது, எல்லாம் முடித்து விடுவார்கள் என்று எண்ணிவிடாதீர்கள். முதலில் பிரசார வேலைக்காக பணம் உதவும்படி இவ்வார "குடி அரசில்" வெளியாகியிருக்கிறது; பணம் சேராவிட்டாலும் குறிப்பிட்ட நாலுபேர்களுடைய கையிலிருந்தாவது போட்டு நடத்தவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையைப் போல்! எவ்வளவு தொகை வேண்டுமானாலும் குறித்திருக்கிற பிரபுக்கள் கொடுக்கச் சக்தி படைத்தவர்கள் என்பது நமக்குத் தெரியும் என்றாலும் இவ்வித பிரசார நிதிக்கு பார்ப்பனரல்லாத எல்லா கனவான்களும் உதவிசெய்து இயக்கத்தை பலப்படுத்தவேண்டுமேயொழிய ஒரு சிலர்கள் மட்டில் உதவுவது அவ்வளவு பெருமையானதாக இராது. எல்லாரும் உதவுவதிலிருந்தல்லவா ஜனங்களுக்கு இதிலிருக்கிற உற்சாகம் வெளிப்படும். இதற்கு விரோதமாக ஒன்றிரண்டு பேர்கள் கொடுத்துச் செய்வது அவ்வளவு பெருமைப்படாது என்பது எனது தாழ்மையான எண்ணம். ஆதலால் எல்லாப் பார்ப்பனரல்லாத கனவான்களும் எல்லாத் தலைவர்களும் ஏழை மக்கள் பேரில் கருணை கூர்ந்து பணம் உதவி இயக்கத்தை பலப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சு. செண்பகம், கோவில்பட்டி.

---

## "சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் பொய்."

"இந்தியாவிலுள்ள இந்துக்கள் எல்லோரும் ஒன்றுகூடி இப்பொழுதுள்ளபடி தீண்டாமையென்பதற்கு சாஸ்திரத்திலும் ஸ்மிருதியிலும் ஆதாரம் இருக்கிறதென்று கூறிய போதிலும் அந்த சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் பொய்யானவையென்று நான் சொல்லுவேன். இந்தக் கொள்கைகள் மூன்றையும் நான் செல்லும் இடமெல்லாம சொல்லிக்கொண்டுபோவேன்." மகாத்மா வாக்கு.

## பிறப்புரிமையும் அதன் தடைகளும்.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வைப்பாட்டி மக்களாகவும் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டவர்கள் ஆகிறோம். நம்மை இழிவாய்க் கருதுபவர்கள் காலிலேயே விழுந்து கும்பிடவேண்டியவர்களாகிறோம். இன்னும் நமது வாழ்நாள் முழுவதும் அதாவது தாய் வயிற்றில் கருத்தரித்த நிமிட முதற்கொண்டு நமது மதச்சடங்கு செலவைப் பாருங்கள். சர்க்கார் நம்மிடம் வரி வசூல் செய்கிறார்கள்; இதை அதிகமென்கிறோம். தவிர நம்மிடம் வசூலிக்கும் வரியை நமக்காக செலவு செய்வதில்லை என்றும் இது நமது சுய மரியாதைக்கு ஈனம் என்றும் சொல்லி சர்க்காருடன் சண்டை செய்கிறோம். பாமர ஜனங்களை சர்க்காருக்கு விரோதமாய் கிளப்பிவிட்டு பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகங்களை பார்ப்பனர்கள் பெற்று நமது சுயமரியாதைக்கும் அவ்வுத்தியோகங்கள் மூலமாய் இழிவை ஏற்படுத்திக்கொள்ளுகிறோம்.

### பார்ப்பன வரி.

ஆனால் மதத்தின்பேரால் பார்ப்பனர் நம்மிடம் வசூலிக்கும் வரியைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை. சர்க்கார் வரிக்காவது ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். அதாவது பூமிவரி, வருமானவரி, ஸ்டாம்புவரி என்பதாக குறிப்பு இருக்கிறது. இதுகளுக்கு பூமி உள்ளவர்கள், இவ்வளவு ரூபாய் வரும்படி உள்ளவர்கள் பிராது உள்ளவர்கள் முதலியவர்கள்தான் இந்த வரிகள் கொடுக்கப்பட்டவர்கள். வரி கொடுக்கக்கட்டுப்படாதவர்கள் 100-க்கு 90 பேர்கள் இருக்கிறார்கள் இந்த வரியையும் நமக்காக ஏதோ செலவு செய்வதாய் கணக்கும் காட்டுகிறார்கள். ஆனால் மதச் சடங்குகளின் பேரால் பார்ப்பனர் வசூல் செய்யும் வரிக்கு அளவே இல்லை. மனிதனாகப் பிறந்தவன் எல்லாம் அகர்வத் தன்னை எவனாவது இந்து என்று சொல்லிக்கொண்டால் அவனை உடனே பார்ப்பனவரி சனியன் பிடித்துக்கொண்டது என்பதுபோல் காலவரையறை ஒன்றுமே இல்லாமல் கர்ப்பந்தரித்தது முதல் சாகும்வரை செத்தும்விடாமல் அதாவது கர்ப்பாதான வரி, சீமந்த வரி, பிள்ளைப்பேறு வரி, தீட்டுக்கழித்தல் வரி, தொட்டிலிடல் வரி, பேர் வைத்தல் வரி, ஆயுசு ஓம வரி, சோறூட்டல் வரி, கிரக தோஷ வரி, வித்தியாப்பியாச வரி, கல்யாண வரி, சாந்தி முகூர்த்த வரி, தாசி வைத்தால் அதற்கு ஒரு சாந்தி முகூர்த்த வரி, சாவு வரி, சாக 10 நாழிகைவரி, செத்தபின்னும்வரி, செத்தவர் மக்களைப் பிடித்து வருஷா வருஷம் வரி ஆகிய பல துறைகளில் (இவற்றைப் பற்றி மதுரை மகாநாட்டில் ஸ்ரீமான் K. V. ரெட்டி நாயுடுகாரு, அன்னிய வகுப்புப்புரோகிதரை விலக்க கொண்டுவந்த தீர்மானத்தில் பேசிய வைகளை அனுசரித்ததாகவே பேசினார். ஆதலால் அதைப் பார்த்துக் கொள்ளலாம். 2-1-27ல் "குடி அரசு" 7-ம் பக்கம் பார்க்க) காலாவதி இல்லாமலும் ஒரு நபரைக்கூட விடாமல் 100-க்கு 100-பேரிடம் பணக்காரன் ஏழை என்கிற பாகுபாடே இல்லாமல் கொடுப்போர் முட்டாள் தனத்துக்கும் களிமண் மூளைக்கும் தகுந்தபடி வரி கறந்து விடுகிறார்கள்.

### வரியுங்கொடுத்து காலிலும் விழுவது.

இந்தவரி வசூலுக்கு ஏதாவது பலன் உண்டா என்று பார்த்தால் இதை விட முட்டாள்தனமான காரியம் உலகில் வேறொன்றுமில்லை என்று சொல்லத் தக்க மாதிரி அதாவது — "சுவாமிகளே! நான் கொஞ்சமாகச்செய்திருந்தாலும் என்னுடைய பக்தி சிரத்தையை மதித்து அதைப்பெரிதாக எண்ணி காசி கங்கையில் செய்தது போலவும் பிரயாகை வடவால விருக்ஷத்தின் கீழ் செய்தது போலவும் ஆகும்படி செய்து எனது பெற்றோர்களுக்கு மோக்ஷமும் திருப்தியும் உண்டாகும்படி அருளுவதுடன் என்னையும் சிரஞ்சீவியாக்கி எனது பாபங்களை மன்னித்து மோக்ஷம் லபிக்கும்படி கிருபை செய்ய வேண்டியது." என்று சொல்லி பார்ப்பனர் காலில் நமது தலை முட்டும்படி விழுந்து கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுவதுமாய் நடந்து வருகிறோம். இவ்வித சடங்குக்குச் செலவாகும் பணம் எத்தனைகோடி, தங்கச் சொம்பு, வெள்ளிச் சொம்பு, வீடு, பூமி, கன்னிகை முதலிய தானங்கள் சமாராதனைகள் சாந்திகள் முதலிய காரியங்களில் ஆகும் செலவுகள் இதுகள் எத்தனை கோடி ஆகும் என்பதைக்கவனித்துப் பாருங்கள் இதற்கு ஏதாவது பிரயோஜனமுண்டா என்பதை யோசியுங்கள். இந்தச்செலவுகள் ஒருபுறம் நம்மை பிச்சுப் பிடுங்கித் தின்னவும் இதன் மூலம் நமது பிறப்புரிமையாகிய சுயமரியாதை எவ்வளவு பாதிகப்பட்டு அடிமையாகி வாழுகிறோம் என்பதையும் யோசியுங்கள். இப்படி எத்தனையோ விதமான தடைகள் செயற்கையிலேயே அதாவது நமது அறிவீனத்தினாலேயே நம்மைச்சூழ்ந்துகொண்டு வாட்டுகின்றன. இவைகளைக களைந்தெறிய வழிதேடுங்கள். பிறகு சுயராஜ்ஜியம் தானாக வந்துவிடும். பார்ப்பானுக்குப் பணம் கொடுத்து அவன் காலில் விழுந்தால் நமது பெற்றோர்கள் மோக்ஷத்திற்கு போவார்கள் நமது பாவம் தீரும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஜன சமூகத்திற்கு சுயராஜ்ஜியம் வேண்டுமென்பது யாராவது நம்பககூடிய காரியமா? வீணாக அதாவது சில பார்ப்பனர்கள் பிழைக்க இந்துக்களாக இருப்பது போலவே சில புரட்டுக்காரர்களும பித்தலாட்டக்காரர்களும் அயோக்கியர்களும் பிழைக்க சுயராஜ்ஜியம் சுயராஜ்ஜியம் என்று கத்தி ஏமாறுகிறீர்கள்.

### உண்மை சுயராஜ்யம் காணுமிடம்

சுயமரியாதை கண்டவிடம்தான் சுயராஜ்ஜியமே தவிர சுயராஜ்ஜியம் என்று ஒரு தனி வஸ்துவில்லை என்பதை உணர வேண்டும். ஆதலால்பிறப்புரிமை இன்னது என்பதும் அது இன்ன விஷயங்களால் தடைப்பட்டிருக்கிறது என்பதும் அத்தடைகளிலிருந்து விலக இன்னின்னது செய்யவேண்டும் என்பதும் சுயராஜ்ஜியம் என்பது இதுபோலவே மக்களை ஏமாற்றும் ஒரு புரட்டான மார்க்கமென்பதும சுயமரியாதை கண்டவிடத்தில் உண்மையான சுயராஜ்ஜியம் என்பது துலங்கும் என்பதும் விளங்கி இருக்குமென்று நினைக்கிறேன் என்று பொருள்படப் பேசி முடித்தார்.

## திருவண்ணாமலை

மதுரையில் கூடிய பாப்பனரல்லதார் மகாநட்டுக்கு இந்நகரிலிருந்து அடியில் கண்ட கனவான்கள் சென்று 27ம் தேதி மாலை வண்டிக்கு இங்கு திரும்பி வந்தார்கள் ஸ்ரீமான்கள் தி சா. முத்துகுமாரசாமி முதலியார் (முனிசிபல் சேர்மன் திருவண்ணாமலை) இராமச்சந்திர ரெட்டியார் (வைஸ்-பிரசிடெண்டு தாலூகா போர்டு திருவண்ணாமலை) M. B. இரங்கசாமி ரெட்டியார் (டிஸ்ட்ரிக்ட்) போர்டு மெம்பர் முனிசிபல் கவுன்சிலர், தண்டராம்பட்டு கோவாப்ரேட்டிவ் யூனியன் செக்ரட்டரி) K. கோபாலசாமி முதலியார் B. A., B L., (வக்கீல் திருவண்ணாமலை) முத்துசாமி நயினார் (முனிசிபல் கவுன்சிலர்) சாமி செட்டியார் (பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு திருவண்ணாமலை) புழுதியூர் வரதப்ப ரெட்டியார் (செங்கம் கோவாப்ரேட்டிவ் யூனியன் காரியதரிசி) A. பாலசந்திர முதலியார B. A., ஆதிமூல உடையார் இன்னும சிலரும் மகாநாட்டுக்கு சென்றார்கள். இவர்கள் இந்நகரிலும் கிராமங்களிலும் பார்ப்பனர் அல்லாதார் சங்கத்தை ஸ்தாபிக்க மிகுந்த ஊக்கத்துடன் உழைத்து வருகிறார்கள் என்றுதெரிய வருகிறது என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## திருவாரூர் முனிசிபல் தமிழ் சித்த வைத்தியசாலை

இவ்வைத்தியசாலையில் சென்ற 1926ஆ ஜனவரி-மீ முதல் டிசம்பர்-மீ 31ல முடிய சிகிச்சை செய்யப்பட்டிருக்கிற சிக்காளிகளின் வருஷாந்திர ரிப்போர்ட்டுக்கு நகல்:—

தினசரி நம்பர்கள் 18650, ஆண் 8899, பெண் 5631, இந்து 17355, முகம்மதியர்கள் 1264, கிறிஸ்தவர்கள் 31, ஆண் குழந்தைகள் 2210, பெண் குழந்தைகள் 1920, பழைய சிக்காளிகள் 26990, புதிய சிக்காளிகள் 18650, உள்ளூர் சிக்காளிகள் 44582, வெளியூர் சிக்காளிகள் 1018, ஆக கூடுதல் 45640.

ஸ்தலஸ்தாபனங்களின் மூலமாய் "தமிழ் சித்த வைத்தியசாலைகள்" ஏற்படுத்தி பொது மக்களுக்கு இலகுவான முறையிலும, செலவிலும் வைத்திய உதவி கிடைக்கும்படி செய்தால் அது ஜீவகாருண்யத் திருத் தொண்டாகும். உலகிலுள்ள வைத்தியங்களுக் கெல்லாம் சிகரம் போன்றது "தமிழ் சித்த வைத்தியம்" ஒன்றே.

ஊழியன், ஜீ. கண்ணுசாமி,
சித்த வைத்திய பிரசாரகன் & வைத்தியன்,
முனிசிபல் தமிழ் ஆஸ்பத்திரி, திருவாரூர்.

---

சென்னை யோகானந்தாசிரமம்—சித்த வைத்திய சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகின்ற தரும வைத்தியசாலைகளில் நவம்பர் மாதம் முதலிருந்து முடியுமளவும் மருந்துண்ட நோயாளிகளின் கணக்கு:—

1-வது இராயபுரம்.

ஆண் 481, பெண் 305, சிறுவர் 237 ஆக 1023.

2-வது உப்பரவர்பாளையம்.

ஆண் 522, பெண் 496, சிறுவர் 62 ஆக 1080.

இவ்வைத்தியசாலைகள் ஏழை நோயாளிகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறதென்று பலரும் கருதுகின்றார்கள்.

இப்படிக்கு அமைச்சர்,
சண்முகானந்தசாமி.

## ஓர் வேண்டுகோள்.

கனவிற்கண்ட உலகம் எப்படி முக்காலத்திலும் பொய்யோ அதுபோல உலகமும் பொய்; வெறுந்தோற்றமாய் உள்ளது, என்று சொல்லும் அத்துவைதமதாசாரியரான சங்கராசாரியரவர்கள் இங்குவந்துள்ளார்கள். தான்கொண்ட கொள்கையை எவ்வுயிரும் தெளிந்து அனுபவிக்கும்படி செய்வது அவர்தம் கடனும். ஒரு சமூகத்தை வாழ்விக்க வரும்புகிறவர், தான் தன் செய்கையிலேயே நடத்திக்காட்டுவது அவசியமாகும் பொருளிலாவது, வீண் ஆடம்பரத்திலாவது சுவாமிகளுக்கு விருப்பமிருக்குமானால் அவர் தம் நிலையில் தவறினவர்கள் ஆவார்கள். தான் உயர்ந்த கருத்துடனும் ஆத்மானுபவத்துடனும் இருக்கலாம். ஆனால் சிறந்த பெரியோரும் அநேக இடங்களில் அபக்குவமுள்ள சிஷ்யர்களால் உள்ள பேரும் புகழும் இழந்துஅபகீர்த்தி அடைவது கண்ணாரக் கண்டதே.

காந்தி அடிகளுடைய பெயரைச்சொல்லி தனக்கு ஓட்டுத் தரும்படி கேட்கும் இக்காலத்து ஜனங்களைப்போல ஆதிசங்கருடைய பேரையும் சரித்திரத்தையும் தேனொழுகும் நளினமொழிகளிலே சொல்லி, அவர்தம்மரபில் வந்துள்ள சுவாமிகளின் பாத பூஜைக்குப் பொருளுதவி கிருபைக்குப் பாத்திரராகும்படி சொல்லப்படுகிறது. ஆதி சங்கரர் இப்பொழுது இருந்திருப்பாரானால் இவ்வித பிரசாரத்தையும் பாத பூஜைக்கு பணம் கேட்பதையும் கண்டு பொறுப்பரோ? சுவாமியின் பாத பூஜைக்கு ரூ. 108, 308, 1,008 உதவவேண்டுமானால் இக்காலத்து ஏழை மக்கள் பொருளுக்கு என் செய்வார்கள்? வக்கீலுக்கு வரும்படி கிடையாது; வாத்தியாருக்கு வருமானமில்லை; உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கட்டை; வியாபாரிகளுக்கு வருவது நஷ்டம்; விவசாயிகளுக்கு விளைவது சொற்பம்; தொழிலற்றிருப்பவர்கள் கோடாநுகோடி. இப்படியாக இருக்கும் இக்காலத்தில் இவர்களிடம் பயந்தும் நிர்ப்பந்தித்தும் பொருள் வசூல் செய்து பாதபூசை செய்தால்தான் மோக்ஷத்துக்கு அருகர் ஆவரோ? சில பத்திர புஷ்பங்களால்மட்டும் ஆராதித்திடில் ஆகாதோ? சென்றிடும் ஒவ்வோரிடத்திலும் ஆயிரக்கணக்கான பொருள் வசூலிக்கப்படுமானால் தேசம் எவ்வளவு ஏழமை அடையும்? "சுவாமிகளுக்கே பொருளில் இவ்வளவு இச்சையிருந்தால் நாம் ஏன் அதற்காக அல்லும் பகலும் அலையலாகாது? என்று கேட்பாருக்கு என்ன சமாதானம் சொல்லுகிறது? கலிகாலமல்லவா? தலைகீழ் முறைகள் என்பார் எத்தனைபேர்!

தனக்குத் தந்த பொன்னை ஒரு கையிற்கொண்டு மறு கையில் மண்ணைவாரி கங்கையில் இறங்கி ஏ பொன்னே! ஏ மண்ணே! நீங்கள் இருவரும் எனக்குச் சமமே என்று நதியில்விட்ட ராமகிருஷ்ண பரமஹம்சருடைய செய்கையன்றோ செய்கை! அதுவன்றோ துறவு!

சுவாமிகள் தம்மிடத்திலேனும், தம் சிஷ்யரிடமேனும் குறைகள் இருக்கக்கண்டால் அவைகளை நீக்குவதுமன்றி பிறப்புக்குக் காரணமான ஆசையென்னும் கொடியவலையினின்றும் எவ்வுயிரும் விடுதலை அடையும் வழியினை அருள்வார்களாக.

அன்பன்.

---

## அஸ்ஸாம் காங்கிரஸ் தீர்மானம்,

(சென்றவாரத் தொடர்ச்சி)

### 10 நாணயச் செலாவணி.

நாணயச் செலாவணிக் கமிஷனரின் அறிக்கையிலிருந்து எழுந்துள்ள பிரச்னைகளின் முக்கியத்தை இந்தக் காங்கிரஸ் உணர்ந்து, இந்த விஷயத்தை அவசியமானால் நிபுணர்களுடைய உதவியுடன் நன்கு ஆராயும்படியும் இந்திய மகாஜனங்களின் நன்மைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தியா சட்டசபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமெனா யோசனை கூறும்படியும் காரியக்கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கிறது.

### 11 எப்போதும் கதரணிதல்.

காங்கிரஸ் அமைப்பின் 7வது விதியில் 4வது உட்பிரிவைப் பின்வருமாறு மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.—(அ) கையால் நூற்றுக் கையால் நெய்த கதரையே வழக்கமாக எப்போதும் அணியாதவர் எவரும் காங்கிரஸ் பிரதிநிதிகளையோ காங்கிரஸ் நிர்வாக கமிட்டி அங்கத்தவரையோ தேர்ந்தெடுப்பதில் வாக்குக் கொடுப்பதற்கும், அவ்வாறு தாங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், மேலும் காங்கிரஸ் சம்பந்தமான எந்தக்கூட்டத்திலும் கலந்துகொள்ளவும் உரிமையுள்ளவராகமாட்டார். (ஆ) ஷை பிரிவை நன்கு நிறைவேற்றி வைப்பதற்காக வேண்டிய விதிமுறைகளை ஏற்படுத்தக் காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது.

### 12 சீக்கியக் கைதிகள்.

அரசாங்கத்தார் குருத்வாரச் சட்டத்தைச் செய்து, குருத்வாரக் கிளர்ச்சியின் நியாயத்தை ஒப்புக்கொண்டிருந்தும், ஸர்தார் காரக்ஸிங் முதலிய சிக்கியக் கைதிகளை இன்னும் விடுதலை செய்யாதிருப்பது குறித்து இம்மகாசபை வருந்துகிறது. (1) குருத்வாரக் கிளர்ச்சி சம்பந்தமாகச் சிறையிலிடப்பட்டவர்கள் எல்லாரும் விடுதலை செய்யப்படும் வரையும் (2) சிக்கியர்களுக்கு விரோதமான எல்லா அடக்குமுறைச் சட்டங்களும் ரத்து செய்யப்படும் வரையும் (3) சிக்கியர்களின் மற்ற முக்கிய குறைகளும் நீக்கப்படும்வரையும் சிக்கியப் பிரச்னை தீர்ந்ததாகாதென்று இம்மகாசபை அபிப்பிராயப்படுகிறது.

### 13 காரியதரிசிகள்.

அடுத்த ஆண்டுக்குக் காங்கிரஸ் மகாசபையின் பொதுக்காரியதரிசிகளாக ஸ்ரீமான்கள் எ. ரங்கசாமி அய்யங்கார், வல்லபாய் படேல் டாக்டர் அன்சாரி ஆகிய இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

---

## மங்கலம்.

31—12—26 தேதி மாலை சண்முகாநந்த வாசகசாலையில் ஷை வாசகசாலையின் நிர்வாகஸ்தரும் பொதுஜனங்களும் உள்ளிட்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. இவ்வாசகசாலையின் பிரசிடெண்டாக ஸ்ரீமான் க. முத்துச்சாமி தேவரும், வைஸ் பிரசிடெண்டாக ஸ்ரீமான் க. சிதம்பரத் தேவரும், பொக்கிஷதாரராக ஸ்ரீமான் குழந்தை கவண்டரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் ஸ்ரீமான்கள் கா. சின்னப்பகவுண்டர், எம். கிருஷ்ணசாமி முதலியார் முறையே தமிழைப்பற்றியும், பத்திரிகையின் அவசியம், விஷமப்பிரசாரகர் என்னும் பொருள்கள்பற்றியும் பேசினார்கள்.

சுவாமி சிரத்தானந்தர் கொலையுண்டிறந்தமைக்கு வருத்தப்படுவதாயும் சுவாமிகளின் குடும்பத்தாருக்கு அநுதாபம் காட்டுவதாயும் ஸ்ரீமான் ஆர். டி. கேசவலு பிள்ளையவர்களால் உருக்கமாகப் பேசப்பட்டபின் சபை கலைந்ததாக காரியதரிசி ஸ்ரீமான் மாணிக்கம் அறிவிக்கிறார்.

## வாலிப ஒற்றுமைச் சங்கம் தூத்துக்குடி.

இச்சங்கத்தின் ஆதரவில் நாளது மார்கழி-௴ 14௳ புதன்கிழமை காலை 7-மணிக்குச் சென்னை பச்சையப்பன் கல்லூரி தலைமைத் தமிழாசிரியர் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் அவைத் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நிகழ்ந்தது. அவ்வமயம் திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளை (மணம் பூண்டி) அவர்கள் "தொண்டு" என்னும் பொருள்பற்றி மிக்க இன்னிசையோடும் சொற் சுவையோடும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் நம் பாரத நாட்டிற்காகச் செய்யும் தொண்டைக் குறித்து உபந்நியாசகர் கீழ் வருமாறு கூறினார்கள். "ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் தனக்கு எவ்வளவோ நிதியிருந்தும் அவைகளின்மேல் பற்றற்று நம் நாட்டின்நலத்தைக் கருதியும், பார்ப்பனரல்லாதார் அபிவிருத்தியைக் கருதியும் மிகவும் உழைக்கிறார்கள். நீங்களும் அவர்கள் போல் தொண்டு செய்ய வேண்டுவது உங்களுடைய கடமை."

அவைத் தலைவர்கள் உபந்நியாசம் செய்யுங்கால் குறிப்பாக இங்கிலாந்து, ஐரோப்பா துருக்கி முதலிய நாடுகள் எப்படி வாலிபர்களால் முன்னுக்கு வந்ததென்றும், துருக்கி நாட்டிலுள்ள கோஷா வழக்கமானது வாலிபர் இயக்கத்தாலேயே நீக்கப் பெற்றது என்றும், அயர்லாந்து அமெரிக்கா முதலிய நாடுகளெல்லாம் வாலிபர்களாலேயே சுய ஆட்சி அடைந்தன வென்றும், நாமும் அவ்வாறே செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்த பொழுதுதான் நம் பாரத நாடானது மேன்மையுறும் என்றும் தெளிவாக எடுத்துரைத்தனர்.

கடைசியாக மதுரையில் நடந்தேறிய பார்ப்பனரல்லாதார் 10-வது மாகாண மகாநாட்டில் நடந்த தீர்மானங்களின்படி நடத்தல் நன்றென்றும் ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியார் அவர்கள் கூறுகின்றபடி பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கங்களுக்கு இச்சங்கத்தினர் யாவரும் தங்களாலியன்ற உதவி புரிவது கடமை என்றும் மிகவும் விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள் என்று காரியதரிசி, பி. கந்தசாமி செட்டியார், அறிவிக்கிறார்.

---


பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

**மஹா சந்தனாதித் தைலம்**

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை.

## பகிரங்கக் கடிதங்கள்.

திருவாளர்கள்,

M. R. சேதுரத்தினம் அய்யர் அவர்கள்
W. ராமசாமி அய்யர் அவர்கள்

திருச்சி.

ஐயன்மீர்! தாங்களிருவரும் காங்கிரஸ் அல்லது சுயராஜ்யக்கட்சியினர் என்று சொல்லப்படுவது உண்மையா? உண்மையாயின் தேர்தலுக்கு முன்பு தாங்கள் எவ்விதமிருந்தீர்கள்? ஏன் தேர்தல் காலத்தில் சுயேச்சைக் கட்சியென்று கலெக்டரிடம் கூறிப் பொது மக்களிடத்திலும் பறையடித்தீர்கள்? தங்களுடைய "சுயேச்சை" என்ற கொள்கையினால் சுயராஜ்யக் கட்சிக்குத் திருச்சி சாவுமணி அடித்துவிட்டது என்பதை ஒப்புக்கொண்டதாக வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறதா? அல்லவா? அப்படியிருக்கும்பொழுது தேர்தலில் வெற்றிபெற்றதும் பார்ப்பனரல்லாதாரின் வளர்ச்சிக்கே பெரிய இடையூறாக உள்ள பார்ப்பனக் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் எண்ணிக்கையில் இரண்டை அதிகப்படுத்தியது யோக்கியமான செய்கையாகுமா? தங்களுடைய செய்கை ஓட்டர்களின் அறியாமையை விளக்குகிறதா? அன்றி தங்கள் நயவஞ்சகப்புத்தி சாமர்த்தியத்தை விளக்குகிறதா? அல்லது சுயநலமே உருக்கொண்டவர்கள் பார்ப்பனர்கள் என்ற சத்திய வாக்கை மெய்ப்பிக்கிறதா? என்று வினவுகிறோம். கடவுள் ஒருவர் உண்டு; சத்தியம் ஒன்றுண்டு என்ற எண்ணமாவது பொது ஜனங்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி அவர்கள் பிரதிநிதியாக உழைக்கவேண்டும் என்ற எண்ணமாவது சிறிதேனும் தங்களுக்கு இருந்தால், திருச்சியில் உள்ள இலட்சக்கணக்கான மக்களை இவ்வாறு வஞ்சித்திருக்கக் காரணம் இல்லையென்பதே எமது முடிவான துணிபு.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணிவாசகத் தமிழகம்"
திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீமான் S சீனிவாசய்யங்கார் அவர்கள்
காங்கிரஸ் கமிட்டித் தலைவர்,
சென்னை.

ஐயா, சென்னை சட்டசபையில் சுயராஜ்யக்கட்சியினரே மெஜாரிட்டியாக வந்துவிட்டார்கள் என்றதினாலும், வெற்றி நமமுடையதே என்றதினாலும் இனி விரைவில் முட்டுக்கட்டைபோட்டு, தேரைக்கிழே தள்ளி இரட்டை ஆட்சியை ஒழித்து சுயராஜ்யம் வாங்கிவிடத் தங்களுக்கு வல்லமை உண்டென்றும் வருகிற சுயராஜ்யத்தில் நாமும் பங்கு பெறலாம் என்றும் அளவுகடந்த மகிழ்ச்சியோடிருந்தேன். ஆனால் சில தினங்களுக்கு முன்னர் தாங்கள் விடுத்துள்ள அறிக்கையைக் கண்டு திடுக்கிட்டேன். அவ்வறிக்கையில் "..........தற்போதுள்ள கட்டுப்பாடு இக்கட்சியில் இனனும் 6 மாதத்திற்கோ, ஒரு வருடத்திற்கோ, நிலைத்திருக்குமானால் விசேஷ பலன் கிடைக்குமென்று நான் நம்பி யிருக்கிறேன்" என்று வரைந்திருக்கிறது.

தங்களுக்கு ஏன் இத்தனை சந்தேகம்? 6 மாத காலங்கூட நிலைத்திருக்காதா? இதுவரை இக்கட்சிக்கு இம்மாதிரியான கட்டுப்பாடே இல்லாதிருந்ததா? நூதனமாக வந்த கட்டுப்பாடென்ன? என்ற ஐயப்பாடுகள் நமக்கு ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றவே என் ஆசை பகற்கனவாயிற்று.

ஆகவே தாங்கள் $31\frac{1}{2}$ கோடி ஜனங்களின் நன்மைக்காக ஸ்தாபித்த ஒரு சங்கத்தின் தலைவர் என்பது உண்மையானால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுடைய நன்மையையும் பாதுகாக்கும் பொறுப்பு தங்களிடம் இருப்பது உண்மையானால், வகுப்பு வித்தியாசம், பேதபுத்தி என்பது தங்களிடம் இல்லையானால் தயவு செய்து எம்போன்றவர்கள் சந்தேகத்தைப் போக்கக் கீழ்கண்ட கேள்விகளுக்குப்பதில் அளிக்க முன் வருவீர்களா?

1. சென்ற சட்ட சபையில் இருந்த சுயராஜ்யக் கட்சியினர்களில் எத்தனை பேர் தோல்வியுற்றார்கள்? ஏன்?

2. எலெக்ஷனுக்கு 11/2 மாதத்திற்கு முன் தாங்கள் பத்திரிகையில் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்பட்டவர்கள் என்று பெயர் கொடுத்திருந்தீர்களே அவர்களில் எத்தனை பேர்கள் வெற்றிபெற்றார்கள்? எத்தனை பேர் தோல்வியுற்றனர்?

3. அப்போது கலம்போட்டு எழுதிய ஜாப்தாவைப் பத்திரிகையின் சந்தா நேயர்கள் குப்பையில் போட்டுவிட்டார்கள் என்று நினைத்துதான் இப்பொழுது ஜெயித்தவர்களின் பெயர்களையெல்லாம காங்கிரஸ் கலத்தில் போட்டிருக்கிறீர்களா? அல்லது அவர்கள் உண்மையாகவே காங்கிரஸ் கட்சியின் சார்பாய் நிறுத்தப்பட்டு வெற்றியடைந்தவர்களா?

4. அப்படியானால் எத்தனை பேருக்குக் காங்கிரஸ் என்பதன் பொருள் தெரியும்? எத்தனை பேர் காங்கிரஸ் கட்சியில் உழைத்தவர்கள்? எத்தனை பேர் காங்கிரஸ் கொள்கைப்படி ரூ. 1000 டிபாசிட்டின்பேரில் நிறுத்தப்பட்டார்கள்? அவர்களில் தோல்வி எத்தனை? வெற்றி எவ்வளவு?

5. சுயேச்சைக் கட்சியின் சார்பாக நின்று வெற்றியடைந்தபிறகு தங்களுடைய ஏமாற்றுதலுக்கு அடிமைப்பட்டு சுயராஜ்யக் கட்சியில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்? தங்களுடைய படம் பத்திரிகைகளில் போடப்படுவதற்காகவும் தங்களைப்பற்றி மொச்சக் கொட்டை எழுத்தில் விளம்பரம் செய்யப்படுவதற்காகவும் விரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்? வகுப்புப் பேய் தலைவிரித்தாட அவசர அவசரமாய் தந்தி மூலமாக ஓடித் தாங்களாகவே சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்த பார்ப்பனர்கள் எத்தனை பேர்?

ஆகிய இந்த கேள்விகளுக்குமட்டும் பதில் எழுதினால் சுயராஜ்யக் கட்சியின் மெஜாரிட்டியாகிய 48 பேர்களின் வலுவும் தெரிந்து தாங்கள் கூறியது போல் 6 மாதமாவது நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டு சந்தோஷமாக இருக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். பதில் எழுத மறுப்பீர்களானால், தங்களைப் பொது ஜனங்கள், ஜனநாயகக் கட்சியின் பொறுப்பு வாய்ந்த தலைவர் என்று கருதுவார்களா? என்பதைத் தாங்களே யோசியுங்கள்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணிவாசகத் தமிழகம்,"
திருச்சிராப்பள்ளி.

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை 43-வது ஆண்டுவிழா.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 43-வது ஆண்டுவிழா, 1926-ஹு டிசம்பர் மாதம் 27, 28-ந் தேதிகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தலைமையின்கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆடவரும் பெண்டிரும் சுமார் 1500 பேர் குழுமியிருந்தனர். சுவாமி சிரத்தானந்தர் படுகொலை செய்யப்பட்ட செய்தியைக் குறித்துச் சபையார் தங்களுக்குற்ற துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். தலைவர் முன்னுரையாய்ச் சைவ சித்தாந்தத்தின் உண்மைத் தத்துவங்களைப் பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் திருவாளர் புராணிகர் முத்துக்குமாரசாமி பிள்ளை, சென்னை ஸ்ரீமதி பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள், பாரிப்பாக்கம் வித்வான் கண்ணப்ப முதலியார், திருவாளர்கள் ப. இராமநாத பிள்ளை, கா. சு. குமாரசுவாமி பிள்ளை ஆகிய அறிஞரால் அரிய பொருள்களைப்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. இரண்டாம் நாள் காலை 9 மணிக்கு சபையைச்சேர்ந்த அம்பலவாணர் பெண்பாடசாலையின் 13-வது ஆண்டு நிறைவுவிழா ஸ்ரீமதி பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. மாணவிகளால் கும்மி, கோலாட்டம், சம்பாஷணைகள் நடத்தப்பட்டபின் அவர்களுக்குப் புத்தகப்பரிசு வழங்கப்பட்டது. ஸ்ரீமதி பண்டிதையவர்களாலும் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களாலும் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டிய முறைகளைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மாணவி ஸ்ரீமதி ஷண்முகசுந்தரத்தம்மாளும் மேற்சொன்ன வித்வான்களிற் சிலரும் அரிய பொருள்களைப்பற்றி இனிமையாகப் பேசினார்கள். பின்னர் இந்து தர்மபரிபாலன மசோதாவை முழுமனதோடு ஆதரிப்பதாயும், வைசராய் பிரபு அங்கீகரிக்க வேண்டுமென்றும் தமிழ்ச் சர்வ கலாசாலையைச் சீக்கிரத்தில் அமைக்கச் சென்னை அரசாங்கத்தாரும் சர்வ கலாசாலை அதிகாரிகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், நம்முடைய நன்மை தீமைகளிற் செய்யும் சடங்குகளுக்கு அந்தந்த வகுப்பிலேயே குருமார்களை நியமித்துக்கொள்வதோடு தமிழிலேயே மந்திரங்களைச் சொல்லவேண்டுமென்று எல்லாத் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்வதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைத்தலைவரின் முடிவுரையுடன் பேரவை மங்களகரமாய் நிறைவேறிற்று எனச்சைவ சித்தாந்த சபைக் காரியதரிசி அறிவிக்கிறார்.

## கௌரி ஆயுர்வேத சித்த வைத்ய மந்திரம்.

கௌரிபாலாம்ருத ஸஞ்சீவி குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிகத்தக்க ஒளஷதங்கள் ஆறு அடங்கிய அழகிய பெட்டி.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின்வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற்போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. 1. குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இருமல் இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை. 2. ஜுரம் இசிவு ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி 3. ஸ்நானம் செய்வித்த பின் குழந்தைகளுக்கு உரைத்துப்போடும் உரைமாத்திரையாகிய கௌரி பால கற்பம் 4. குழந்தைகளின் வயிற்றில் கிருமிகள் கட்டுகள் சேராமல் பேதி யாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரோசனி 5. குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி சூர்ணகந்தம் 6. குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரிபாலபோஷணி. இந்த ஆறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ. 3.

இப்பெட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். இருந்தால்குழந்தைகளைவியாதிகள் தொடாா வண்ணம் காப்பாற்றும். வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. குழந்தைகட்கு வியாதிவந்தால் தக்க சிகிச்சை இல்லாமல் சிசு மரணம் அதிகம் ஆகின்றன. இதன்பொருட்டே மூன்று வருடங்களுக்குமுன் சென்னையில் வெளிவரும் நவசக்தி பேப்பரில் குழந்தைகள் வைத்தியம் அதாவது குழந்தைகளை வியாதி தொடாாத வழிகளை வாரம் வாரம் எழுதி வந்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் குடும்ப வைத்யம் அதாவது வைத்யர்கள் தயவின்றி தாங்களே வைத்யம் செய்துகொள்ளும் புத்தகம் வெளிவரும். அதில் வியாதி வாராமல் இருக்கும் மார்க்கங்கள், நோய் வந்துவிட்டால் அதனை நிவர்த்திக்கும் சுலபமான முறைகள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கும் இது பொது ஜன நன்மையைக்கோரி அநேகர் வேண்டுகோளின்மேல் எழுதி முடிக்கப் பெற்றது. பல வைத்தியர்களும் டாக்டர்களும் பார்த்து தீராதென விடப்பெற்ற குஷ்டம், குன்மம், சுவாசகாசம், பாரிசவாய்வு, ஆரம்ப ஆனைக்கால், பிரமேகம், நெரி கட்டி வரும் ஜுரம் பிளேக், காலரா, கண்டமாலை இன்னும்பல கடின வியாதிகட்கும் சிறந்த சஞ்சீவி ஒளஷதங்கள் இருக்கின்றன. மேற்படி நோய்கள் ஸ்ரீ கௌரி தேவியின் அனுக்கிரகத்தால் அநேகம் குணப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்களும் தங்கமெடல்களும் பெற்றிருக்கிறேன். இதனை எம்மிடமுள்ள முழு விபரம் அடங்கிய கேட்லாக்கில் காணலாம். சில போலி வைத்தியர்கள் மலிந்துள்ள இக்காலத்தில மேற்படி வியாதிகளைக் குணப்படுத்துகிறேன் என்றால் எம்மிடம் ஒளஷதம் வாங்கி உபயோகிக்காத புதிய நண்பர்கட்கு நம்பிக்கை வருவது கஷ்டம்.

டாக்டர் V. R. சுந்தரம்,

ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்ய மந்திரம். 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.


## சேலத்தில் முதன் மந்திரியின் விஜயம்.

சென்ற 21-12-26-உ கனம் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் விஜயம் செய்த சமயத்தில் சேலம் நகர் வாசிகள் உற்சாகத்துடன் வரவேற்றார்கள். முதலாவதாக கோவிலில் அபிஷேக ஆராதனை தெய்வ பிரார்த்தனை நடைபெற்றது. பகல் 12 மணி முதல் 6-மணி வரையில் ஏழைகளுக்கு அன்னதானம் அளித்தார்கள். சாயங்காலம் 4 மணிக்கு முதல்மந்திரி அவர்களையும் ஸ்ரீமான் சி. டி. அப்பாவு செட்டியாரையும் ஒரு மோட்டாரில் வைத்து ஊர்வலம் நடைபெற்றது. அவ்வமயம் வழி நெடுக ஆயிரக்கணக்கான ஜனங்கள் சூழ்ந்திருந்தார்கள்

விஸ்வகணபதி தியேட்டரில் மாமபெருங் கூட்டம் கூடிற்று. அச்சமயம் ஸ்ரீமான்கள் ஆர். எச். கோர்ட்டேனே [ஜில்லா ஜட்ஜு] எஸ், ஸல்லிவன் [போலீசு சூப்பிரன்டெண்டு] அப்ஷன் [ஜயில் சூப்பிரன்டெண்டு] ஜி. எப். ப்.எ போக்ஸ் [ஜில்லா போர்டு பிரசிடெண்டு] எஸ். எஸ்டில் (டி. யி. ஒ.) ராமுன்னி மேனன் (சப் ஜட்ஜு] எஸ். சி. வெங்கடப்ப செட்டி, சி. வேணு கோபால் நாயுடு (கடலூர் முனிசிபல் சேர்மென்) கே. ஆர். வெங்கட்டராம அய்யர், ஜேன்ஸ்(டிஸ்ட்ரிக்ட் பாரஸ்டு ஆபீசர்) எஸ். கே. சடகோப முதலியார் ஜமீன்தார் மீனம்பள்ளி மிட்டாதார் பி. முனுசாமி கவுண்டர், எம். டி. சுப்பராய அய்யர். கே. நரசிம்ம அய்யங்கார், பி. வரதராஜலு நாயுடு, கே. வி. சுப்பராவ் எஸ். கோபாலய்யங்கார் [கஜானு டெப்டி கலெக்டர்] டி. வி. ரெங்கநாதம் பிள்ளை, [கஜானு சிரஸ்தார்] பி. வி. ஜியார்ஜ் [எஞ்சினியர்] ஆர். கிருஷ்ணசாமி இம்பீரியல் பாங்கி ஏஜண்டு] ரெவரெண்டு ஹாட்ச், கே. டி, பால்,டி. பி. சென்னகிருஷ்ணசெட்டியார்முதலிய இன்னும் பல கனவான்களும் வந்திருந்தார்கள்,

சேலம் நகர வாசிகள் சார்பாக ஸ்ரீமான் மிட்டாதார் பி. எல். ராமசாமி நாயக்கரால் உபசார பத்திரம் கனம் முதல் மந்திரிக்கும், ஸ்ரீமான் சி. டி. அப்பாவு செட்டியாருக்கும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. இரு கனவான்களுக்கும இந்துக்களால் ஒரு தேக்கச்சேரியும் ஆங்கிலேயர்களால் ஒரு தேக்கச்சேரியும் நடைபெற்றன.

சேலம் ரங்கதாஸ் அவர்களால் அச்சமயம் ஒரு புல்லாங்குழல் கச்சேரி நடைபெற்றது. செட்டியாருக்கு செவ்வாய்ப்பேட்டை ஜனங்களால் கனம் முதல்மந்திரி மூலமாக ஒரு தங்கமெடல் பரிசளிக்கப்பட்டது என்று எம். எஸ். என். செட்டியார், அறிவிக்கிறார்.

---


காதலர்காள்! காதல் ரசம்! முந்துங்கள்!

## ராஜ ராஜ

இன்பரசம்! அன்புமயம் ஆய்விட்டது.

அல்லது

## காதலரின் வெற்றி.

இதில் இளம் காதலர்களின் அந்தரங்கக்காதலின் பெருமையும் சிறுமையும் ரகசியக் கடிதங்களின் தன்மையும் மற்றும் தற்கால உலக அந்தரங்க பல ரகசியங்களும், மற்றும காதலர்களின், பல அரியமர்மங்களும், இன்பமும் நன்மையும் ஊட்டும் இன்ப ஊற்றாகவே சிறந்து விளங்கும், இச் சிறிய அழகிய நூலின் விலை அணா 6 தான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒன்று பெறலாம்.

| | |
|---|---|
| கொக்கோக கோலம் பல உருவப்படங்களுடன் | ... 2—4—0 |
| ஜீவ வஸ்ய பரம ரகஸ்யம் (மானிட வசியம்) | ... 3—0—0 |
| மஹேந்திர ஜாலம் | ... 0—12-0 |
| பண்டிதை மெஸ்மரிஸா | ... 1—8—0 |
| இங்கிலீஷ் சம்பாஷணை புத்தகம் | ... 2—0—0 |

N. B.—மற்றும் எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்கும். வெளிநாட்டிலுள்ளோர் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஏ. என். ராஜா & கோ, (2) ராயபுரம், மதராஸ்.


## காலண்டர் வரவு

—o—

தூரத்திலிருந்து பார்த்தாலும் நன்கு விளங்கும்படியான பெரிய எழுத்துக்களில் சென்னை, திருவல்லிக்கேணி, சோல்டன் கம்பெனியார், தயாரித்துள்ள பல வர்ணங்கொண்ட காலண்டர் மிக அழகானதாயிருக்கிறது. விசேஷ நாட்களைத்தனியாக எடுத்துக்காட்டியிருப்பதும் சிறிய வடிவில் கலம் கட்டி தமிழ்த்தேதி குறிப்பிட்டிருப்பதும் பொருத்தமாயிருக்கிறது.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

# ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சாஸ்வதி விலாசம்
பிரஸா·கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

ஆயிரக்கணக்கான வியாதி[illegible]

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

# இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஆு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்செட டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. [illegible] வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட்டின் பொருட்டாக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், தண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையில் லாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

# பி. பி. அன்ஸன்

## பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**சூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

# மஹா சந்தன தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிசோதித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

# சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.



இனாம் இனாம்!!

# ரகஸ்ய ரத்னம்

அல்லது

## வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அநுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது "**ஆநந்த குண போதினி.**"

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.

அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.





**200 தொழில் முறைகள்.**



கூலிக்காரன்

தொழில் முறைகளைக் கற்று தன் முயற்சியால்

சீமானாயினான்

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள், சர்ப்பத்து, ஐஸ் கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம் பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப், சென்டு கூந்தல் தைலம், பற் பொடி, தேள் விஷசஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 200 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனம்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.



**அம்பட்டன் பியர்ஸ்**

சோப் செய்து கோடீஸ்வரனாகிய உண்மை 24பக்கம் அணா 2. "என் சரித்திரம்" நான் ரூ. 4000 சம்பாதித்த வரலாறு: அணா 2. எத்தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி, திருச்சினாப்பள்ளி.


ஸ்ரீமதி ஈ. வே. ரா. நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.